# தமிழரசு

16-12-1993 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


பிரதமரிடம் முதல்வர் நேரில் கோரிக்கை ... 2

மத்திய அரசு பெருமனவில் வெள்ள நிவாரணத் தொகை வழங்க வேண்டும்! ... 4

நாடுகாப்போரை நாம் காத்திடுவோம்! முதல்வர் உரை ... 6

1994-95-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.2,750 கோடி ஒதுக்கீடு ... 9

புயலாலும் மழையாலும் சேதமடைந்த பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார் ... 11

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ... 17

மதுரை மாநகராட்சி ... 21

பெண்களுக்குப் பெருமைதரும் திட்டங்கள் ... 24

பாலையில் சோலைவனம் ... 27

குறளின் குரல் ... 29

நீதித் துறையினருக்குத் தனிக் குடியிருப்புகள் ... 33

காவல் பணியில் கம்ப்யூட்டர் ... 34

அரசு ஊழியர்களுக்கு ரூ.100 இடைக்கால நிவாரணம் ... 36

பெரியார் மாவட்டத்தில் புயல் வெள்ளம் ... 39

நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் விரைவான நீதி கிடைக்க வேண்டும்! டெல்லி மாநாட்டில் முதல்வர் உரை ... 42



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

மார்கழித் திங்கள் - 1

மலர்:24 இதழ்:12

16-12-1993

விலை: ரூ.3




சர்வதேசத் தொழிலாளர் நல அமைப்பின் இந்திய இயக்குநர் திருமதி ஜோசபைன் கரவாசில் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார் (9.12.1993).



# இயற்கைச் சீற்றத்தால் தமிழகத்தில் ரூ 666 கோடியளவில் பெரும் சேதம்!

# பிரதமரிடம் முதல்வர் நேரில் கோரிக்கை

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இன்று (10.12.1993) இரவு 9.15 மணியிலிருந்து 10.20 மணி வரை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை புதுடெல்லியில் அவரது இல்லத்தில் சந்தித்தார்கள். இந்த சந்திப்பு 65 நிமிடங்கள் நீடித்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்குப் பொன்னாடை போர்த்தி மலர்ச்செண்டு வழங்கினார்கள். பின்னர் சமீபத்தில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றிக்காகத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துத் தமிழ்நாட்டில் புயல் வெள்ளச் சேதங்களை உடனடியாகப் பார்வையிட மத்திய அரசின் சார்பில் மத்திய விவசாய அமைச்சர் திரு பல்ராம் ஜாக்கர் அவர்களையும், மத்திய அரசு அலுவலர்களையும் அனுப்பி வைத்ததற்காக தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் தமிழ்நாட்டில் புயல், பெருமழை வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மற்றும் பொருள் சேதங்கள் பற்றி பிரதமருக்கு விளக்கினார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த 2 மாதங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள என்றும், சேதங்களின் மதிப்பு 666 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது! என்றும் எடுத்துரைத்தார்கள். 666 கோடி ரூபாய்க்கான சேத விவர அறிக்கையினையும் மழை வெள்ளச் சேதங்கள் பற்றிய வீடியோ, கேசட்டு, புகைப்பட ஆல்பம் ஒன்றினையும் பிரதமரிடம் அளித்தார்.

கடந்த 3 ஆண்டுகளாக, தமிழகம் இயற்கைச் சீற்றங்களால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளதாகவும், மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால், இந்த ஆண்டின் சேதங்கள் கடந்த ஆண்டுகளைவிட கடுமையாக உள்ளன என்றும் பாலங்கள், ஏரிகள், நீர்நிலைகள், நெடுஞ்சாலைகள் பொதுக்கட்டடங்கள், மின்வாரிய உபகரணங்கள் ஆகிய வற்றிற்கு ஏற்பட்ட சேதங்கள் வெள்ள நிவாரணப் பணிகளை உடன் மேற்கொள்ளத் தமிழகத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்

என்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பாரதப் பிரதமர் அவர்கள் சேத விவர அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டதோடு தமிழகத்திற்குத் தேவையான நிவாரண உதவிகளை அளிப்பதாக உறுதி அளித்தார்.


மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்படவுள்ள இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையத்தின் (Indo-Singapore Trade Corridor) சிறப்பு அம்சங்களைப் பாரதப் பிரதமருக்கு எடுத்துரைத்து, இந்த மையம் தென் மாநிலங்களில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதையும் எடுத்துரைத்தார். இத்திட்டம் 640 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைக்கு அருகில் 800 ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த மையத்தின் மூலம் 100 கோடி அமெரிக்கன் டாலர் (3600 கோடி ரூபாய்) மதிப்புள்ள வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும் என்றும், இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 2600 கோடி ரூபாய் பெருமானமுள்ள பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் எனவே இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த ஆக்கபூர்வமான உதவிகளையும் சலுகைகளையும் மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் உயிர்மூச்சு பிரச்சினையான 69 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து சமீபத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றதையும், இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஒரு தனிச் சட்டம் ஒன்றை இயற்றி மத்திய அரசின் மூலமாக அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டதையும் அவ்வாறு தனிச் சட்டம் இயற்றி அதற்கு அரசியல் நிர்ணய சட்டத்தில் தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்படுவதற்கும் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நலனைக் கருதி தொடர்து 69 சதவிகித இட ஒதுக்கீடு செயல்படுத்தப்படவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உதவி புரிய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தென் மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் மற்றொரு திட்டமான தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தையும் (Southern Gas Grid) விரைந்து செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு முன்னோடியாக இத்திட்டத்திற்கான ஆயத்த ஆய்வுப் பணிகளைத் துவங்குவதற்கு மத்திய அரசு இனியும் தாமதம் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும் என்றும் பாரதப் பிரதமரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களை வாசல்வரை வந்து வழி அனுப்பி வைத்தார்.





# மத்திய அரசு பெருமளவில் வெள்ள நிவாரணத் தொகை வழங்க வேண்டும்

## மத்திய வேளாண்மைத்துறை அமைச்சரிடம் முதல்வர் கோரிக்கை

மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள் 9.12.1993 அன்று காலை புயலாலும், மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிக்காப்டர் மூலம் பார்வையிட்ட பின்பு மதியம் 2.30 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடம் நேரம் நடந்தது. மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் அவருடைய அறையில் தனியாக சுமார் 15 நிமிடம் நேரம் பேசிவிட்டு, பிறகு அவருடன் வந்த மத்திய அரசு அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்களிடம் புயல், மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளத் தேவைப் படும் நிதி உதவி குறித்த அறிக்கை, சேத விவரங்கள் அடங்கிய போட்டோ ஆல்பம், வீடியோ கேசெட் ஆகியவற்றை வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பேசும்போது தொடர்ந்து 1991, 1992 மற்றும் 1993 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் புயல், பெருமழை, வெள்ளத்தால் தொடர்ந்து பாதிக்கப் பட்டுள்ளது என்றும், கடந்த 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளிக் காற்று மற்றும் பெருமழை, வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு 540 கோடி ரூபாய் என மதிப்பிட்டு நிவாரண உதவு வேண்டி மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்தும் கூட மத்திய அரசிடமிருந்து உதவித் தொகை எதுவும் கிடைக்கவில்லை என்றும், மத்திய அரசு வழங்கியது எல்லாம் 1993-94-ஆம்



ஆண்டிற்குரிய 'இயற்கைச் சீற்றங்கள் நிவாரண நிதியின்' கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 14.65 கோடி ரூபாயும், முன்பணமாக 50 கோடி ரூபாயும், முதல்வர் வழங்கினார்கள். இந்த 50 கோடி 1992-93 நிதியாண்டு இறுதியில் சரிக்கட்டப் பட்டது என்றும் தெரிவித்தார். இந்நிலையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் புயல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டதால், இந்த ஆண்டு சேதங்கள் கடுமையானதோடு, நிவாரணப் பணிகள் மேற் கொள்ளக் கூடுதல் நிதியும் தேவைப்படுகிறது என்றும், இந்த ஆண்டு ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு 666 கோடி ரூபாய் என்றும் எடுத்துரைத் தார். 666 கோடி ரூபாய் உதவி வேண்டி, மதிப்பீட்டு அறிக்கை திரு பல்ராம் ஜாக்கரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த முறை யாவது மத்திய அரசு, தமிழக அரசின் கோரிக் கையை ஏற்று, தாராளமாக நிதி உதவி வழங்கும் என்று தான் நம்புவதாகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குறிப் பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் குறிப்பிட்டபோது ஊட்டியில் இந்த ஆண்டு ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவையும் அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதத்தை யும், எண்ணூர் அருகே கடல் அரிப்பால் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் குறிப்பிட்டுக் காட்டி, இவற்றைச் சீர்செய்யவும், செப்பனிடவும், மத்திய அரசு பெருமளவில் வெள்ள நிவாரண உதவித் தொகையைத் தமிழகத் திற்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள் தமிழகத்தில் இந்த ஆண்டு, புயல், வெள்ளம், மழை காரணமாக கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளதை, இன்று தானே நேரில் கண்டதாகவும், இது குறித்து பாரதப் பிரதமர் அவர்களிடம் தனது விரிவான அறிக்கையை டெல்லி சென்றவுடன் சமர்ப்பிக்கப் போவதாகவும் தெரிவித்தார். மேலும், தமிழக முதல்வர் எடுத்துள்ள அனைத்து நடவடிக்கை களையும் மத்திய அரசு தாராளமாக நிதி உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும், பிரதமரிடம் நிச்சயமாக எடுத்துரைப்பதாக உறுதி கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ்.கண்ணப்பன், தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், வருவாய் நிர்வாக ஆணையர் திரு சி.என். ராமதாஸ், வருவாய்த் துறைச் செயலாளர் திரு ஏ. பால்ராஜ், நிதித் துறைச் செயலாளர் திரு என் நாராயணன், பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு ஆர்.ஆறுமுகம் மற்றும் வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மத்திய நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் திரு கே.வி. தங்கபாலு மத்திய நீர்வளத் துறையைச் சேர்ந்த உறுப்பினர், மத்திய வேளாண் துறை இணைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித் துறை இயக்குநர் திரு ஸ்ரீபதி, ஹட்கோ செயல் இயக்குநர் திரு சுரேஷ் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழக அரசு கோரும் 666 கோடி ரூபாய்க்கான திட்ட மதிப்பு தொடர்பாக சில முக்கிய குறிப்புகள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் கடந்த 2 மாதங்களில் மட்டும் மழை வெள்ளத்தினால் 2.06 இலட்சம் எக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 7.06 இலட்சம் குறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர். கடந்த 2 மாதங்களில் மட்டும் 238 பேர் தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர். 2.62 இலட்சம் குடிசைகள் சேதமடைந்துள்ளன.

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| விவசாயம் | 103.96 |
| பொதுப்பணித் துறை | 400.05 |
| சென்னை மாநகராட்சி | 17.00 |
| தமிழ்நாடு மின் வாரியம் | 7.20 |
| நகராட்சிகள் | 20.93 |
| கால்நடைப் பராமரிப்புத் துறை | 11.05 |
| மீன்வளத் துறை | 3.16 |
| தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | 6.41 |
| குடிசைமாற்று வாரியம் | 8.24 |
| வனம் | 5.00 |
| தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் | 5.00 |
| பொது சுகாதாரம் | 4.00 |
| பேரூராட்சிகள் ஊராட்சிகள் | 55.00 |
| கைத்தறி மற்றும் நெசவுத் துறை | 4.00 |
| வருவாய்த் துறை | 15.00 |
| மொத்தம் | 666.00 |



கொடி நாள்: டிசம்பர்-7

# நாடு காப்போரை நாம் காத்திடுவோம்!

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'கொடி நாள்' — தொலைக்காட்சி — வானொலி உரை

**வ**ணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

எனது அன்பிற்குரிய தமிழகப் பெருமக்களே!

நமது தாய்த் திருநாட்டை, எதிரிகளின் படையெடுப்புகளிலிருந்தும், தீய சக்திகளின் ஆதிக்கத்திலிருந்தும், காத்து நிற்பவர்கள், நமது முப்படை வீரர்கள். போற்றுதலுக்குரிய அவர்களது வீரத்திற்கும், அவ்வீரத்தில் விளைந்த அவர்தம் தன்னலமற்ற தியாகத்திற்கும், நாம் அனைவரும் தலை வணங்கும் தியாகத் திருநாளே 'கொடி நாள்'!

நாட்டைக் காக்கும் செயற்கரிய பணியினைச் செவ்வனே செய்து முடித்து, தற்போது ஓய்வு பெற்றிருக்கும், முன்னாள் படை வீரர்களின் வீட்டைக் காக்க வேண்டிய கடமையினை, நமக்கு நினைவூட்டும் நாள், கொடி நாள். வீரமும், விவேகமும் மிக்க படை வீரர்களை தன்னகத்தே கொண்ட நாடு, ஆற்றலும், ஆக்கமும் மிக்க தலைவனைப் பெற்ற வீட்டிற்கு ஒப்பாகும். அத்தகைய வீர மறவர்களை, தொன்று தொட்டு ஈன்றெடுத்து, அவர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பி மகிழ்ந்த வீர வரலாற்றைக் கொண்டது தான், நமது தமிழகம். சரித்திரம் படைத்த வீரர்கள், இங்கே 'பரணி பாடப்பெற்றனர்'! பாராட்டிப் பெருமைப்படுத்தப்பட்டனர்!

இருப்பினும், வீரத்திற்குப் பாராட்டுதல்களை மட்டும் வழங்குவது, போதுமானது அல்ல என்பதை, நாம் அனைவரும் அறிவோம். வீரர்களது நலன்களைக் காக்க முயற்சிகள் எடுப்பது, நாட்டில் உள்ள நல்லோர் அனைவரின் கடமை என்பதையும், நாம் நன்கு அறிவோம். முப்படை வீரர்களின் நலன்களைக் காக்க வேண்டும்; ஓய்வுபெற்ற முன்னாள் படை வீரர்களது சுமைக்குத் தோள் கொடுக்க வேண்டும்; அவர்தம் குடும்பத்தாரின் இன்னல்களைக் களைய வேண்டும் என்ற எண்ணங்களுக்கு வலுவூட்டி, பல்வேறு நலத்திட்டங்கள் மூலம், அவற்றிற்குச்



செயல் வடிவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை, நமக்கு உணர்த்தும் நாளே, ஆண்டு தோறும் டிசம்பர் 7-ஆம் நாள் கொண்டாடப்படும் கொடி நாள் ஆகும்.

இந்நாளில் திரட்டப்படும் 'கொடி நாள் நிதி', முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தாருடைய மேம்பாட்டுக்கான, நலத்திட்டப் பணிகள் நடைபெறப்பயன்படுவதை எண்ணி, நாம் அனைவரும் மகிழ்கிறோம். கொடி நாள் நிதியினை அதிக அளவில் திரட்டி, முன்னாள் படை வீரர்களுடைய குடும்பத்தாரின் இன்னல்களைக் களைவதில், பல்லாண்டுகளாக முன்னணியில் நிற்கும் பெருமையினைக் கொண்டது, நமது தமிழகம்.

ஒவ்வொரு ஆண்டும், முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நன்கொடையை வாரி வழங்குவதில், அகில இந்திய அளவில், தமிழ் நாடே முதன்மையான மாநிலமாகத் தொடர்ந்து

திகழ்ந்து வருகிறது, என்ற மகிழ்ச்சியான செய்தியை, உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். கொடி நாள் நிதி திரட்டுவதில், அதிக அளவு சாதனை புரிகின்ற மாநிலங்களுக்கு என, மத்திய அரசினால் வழங்கப்படும் முதல் பரிசினை, தமிழகம் தொடர்ச்சியாகப் பெற்று வருவது, நமக்கெல்லாம் பெருமையினையும், பெரு மகிழ்ச்சியினையும் அளிக்கின்றது. அந்தப் பெருமையை நாம் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ளும் வகையில், இந்த ஆண்டும் கொடி நாள் நிதிக்கு, நீங்கள் அனைவரும் வாரி வழங்குவீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

படை வீரர்களது பணி, மிகவும் கடினமானதாகவும், பல்வேறு அபாயங்களைக் கொண்டுள்ளதாகவும் உள்ளது. நமது பரந்த நாட்டின் எல்லைகளைத் தொடர்ந்து கண்காணித்து, அதற்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டும், அவர்கள் பணி முடிவுறுவதில்லை. நாட்டில் அவ்வப்போது ஏற்படும் பல்வேறு இன்னல்களைக் களைவதிலும், படை வீரர்களுக்குப் பெரும் பங்கு உள்ளது. மழை, வெள்ளம், புயல், நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால், மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படும் பொழுதெல்லாம், அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை ஆற்றி, துயர் துடைக்கும் நற்பணியிலும், நமது பாரதப் படை வீரர்கள், மகத்தான பணியாற்றி வருகிறார்கள். சமீபத்தில் மகாராட்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட கொடிய நில நடுக்கத்தை அடுத்து, அங்கு நமது படை வீரர்களும், அவர்களோடு இணைந்து முன்னாள் படை வீரர்களும் ஆற்றிய துயர் துடைப்புப் பணிகள், உலகோர் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றிடும் வண்ணம் அமைந்திருந்தன. அதே போன்று, நீலகிரி மாவட்டத்தில், சமீபத்தில் நடந்த நிலச் சரிவின் போது, மாவட்ட நிர்வாகத்தினரோடு இணைந்து நின்று, படை வீரர்கள் பணியாற்றிய பாங்கினையும், நான் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

'நாடு காப்போரை நாம் காத்திடுவோம்' என்ற கருத்திற்கு ஏற்ப, போரில் கணவரை இழந்த பெண்கள், ஊனமுற்ற படை வீரர்கள், ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்கள், ஆகியோரின் குடும்பத்தாருக்கு மறுவாழ்வு அளித்தல்; அவர்களைப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்தல், போன்ற பொறுப்புக்களை ஆற்ற வேண்டிய கடமை, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது என்பதனை, நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விழைகின்றேன். அவர்களது வாழ்வில் செழுமையும், அமைதியும் நிலவிட, அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு எடுத்து வருகின்றது. அந்த வகையில் தமிழக அரசு, முன்னாள் படை வீரர்களுக்கென, செயல்படுத்தி வரும் மேம்பாட்டுத் திட்டங்கள், அகில இந்திய அளவில் பெரும் வரவேற்பினைப் பெற்று உள்ளன என்பதை, நான் இங்கே பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மக்கள் மனமுவந்து அளிக்கும் 'கொடி நாள் நிதி', உடல் ஊனமுற்ற வீரர்களுக்கும், பாதுகாப்பு மற்றும் இதரப் பணிகளில் மாண்டு போன, தங்கள் இன்னுயிர்த் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும், வயது முதிர்ந்த, ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் நலனுக்காகவும், பல்வேறு உதவித் தொகைகள் அளிக்கப்படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

முன்னாள் படை வீரர்கள், தங்கள் வாழ்க்கையை பிரச்சினைகள் ஏதுமின்றி நடத்திச் செல்ல, அவர்களுக்கு உதவும் வகையில், அவர்கள் சிறு தொழில், மற்றும் வியாபாரம்போன்றவற்றைச் செய்து, தங்கள் சொந்தக் கால்களில் நிற்கக் கூடிய அளவிற்கு உதவிடவும், கொடி நாள் நிதி பயன்படுத்தப்படுகின்றது. பெட்டிக் கடை வைக்க, மாவரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் போன்றவற்றை வாங்க, நிதி உதவி அளித்தும், அவர்கள் தாமே சுயமாகத் தொழில் செய்து, வருவாய் ஈட்டிடத் திட்டங்களைச் செயல்படுத்தியும், தமிழ்நாடு அரசு, முன்னாள் படை வீரர்களுக்கு உதவு நல்கி வருகிறது. இது தவிர, சிறு தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவியும், அவர்கள் பெறும் கடனுக்கு வட்டி மானியமும்,

## தொட்டில் குழந்தைகள்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட தொட்டில் குழந்தைகள் திட்டம், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் இங்கே 30 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. உசிலம்பட்டியைச் சுற்றிலும் இதேபோல 16 காப்பகங்கள் இருக்கின்றன.**



**உசிலம்பட்டி காப்பகத்திலிருந்த திருமதி. ஜெயந்தி, செல்வி ராஜேஸ்வரி ஆகியோர்- ''இங்குள்ள குழந்தைகளின் மருத்துவப் பராமரிப்புக்காக ஒரு டாக்டர் இருக்கிறார். யாருக்கும் தெரியாமல் என்றில்லை; தெரிந்தே குழந்தைகளைக் கொண்டு வந்து அதன் பெற்றோர் ஒப்படைப்பதும் உண்டு. யாரானாலும் சரி; அப்படிக் கொடுத்த குழந்தைகளைத் திரும்பப் பெற வேண்டுமானால், மூன்று மாதத்திற்குள் முறைப்படி மனுச் செய்ய வேண்டும்...'' என்றெல்லாம் தெரிவித்தனர்.**

**திருமதி. உமா வீரப்பன்- குழந்தைகள் வரவேற்பு இல்லம் எனப்படும் இம்மையத்தின் திட்ட அலுவலராவார்.**

அரசால் வழங்கப்படுகிறது. மேலும், சிறு நீரக அறுவைச் சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சை, போன்ற பெரிய மருத்துவச் சிகிச்சைகளுக்கு, 20,000 ரூபாய் வரை, கொடி நாள் நிதியிலிருந்து, தேவைப்படுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது. தொழு நோய், புற்று நோய், ஆகிய வற்றால் துன்புறுவோருக்கும், கண் பார்வை இழந்தவர்களுக்கும், மாதாந்திர நிதி உதவி, அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும், தமிழக அரசால் அளிக்கப்படுகின்றது.

தாய் நாட்டைக் காத்திடும் சிறப்பான பணியினை, திறமையோடு ஆற்றிய முப்படை வீரர்களின் ஆற்றலை, அரசு மேலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' ஒன்றினை அமைக்க, சென்ற ஆண்டு நான் ஆணைகள் பிறப்பித்து இருந்தேன். இதன்மூலம், நமது தொன்மையான கோயில்களைப் பாதுகாக்கும் பணியில், முன்னாள் படை வீரர்கள், மீண்டும் பணியாற்றும் நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை, நான் இந்தத் தருணத்தில், மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முன்னாள் படை வீரர்களது குடும்பத்தாரின் மேம்பாட்டிற்காக, பல்வேறு நலத்திட்ட உதவிகளை, தமிழக அரசு அறிவித்து செயல்படுத்தி வருவதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள். முன்னாள் படை வீரர்களின் நலன் காக்கும் பணியில், தமிழ்நாடு என்றென்றும் முன்னணியில் நிற்கும் வகையில், தமிழக அரசு செயல்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டதிலும், நாம் அடைந்த சுதந்திரத்தைப்போற்றிப் பாதுகாப்பதிலும், என்றென்றும் முன்னணியில் இருக்கும் தமிழகம், முப்படை வீரர் தம் குடும்பத்தாரின் நலன் பேணுவதிலும், ஆண்டுதோறும் முதல் இடத்தைப் பெற்று வருகின்றது என்பதை, நான் முன்பே குறிப்பிட்டேன். அந்தச் சிறப்பினை நமது தமிழகம், இந்த ஆண்டும் தொடர்ந்து பெற்றிட வேண்டும், என்ற எனது பேரவாவினை, இந்த நேரத்தில் வெளிப்படுத்தி, கொடி நாள் நிதிக்காக, நீங்கள் அனைவரும் வாரி வழங்க வேண்டும் என்று, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள், அனைவரையும் கேட்டுக் கொண்டு, முப்படை வீரர் நலம் காக்க, நாம் எந்தத் தியாகத்தையும் புரிய, எப்பொழுதும் தயாராக இருப்போம் என்ற சூளுரையை, இச்சீரிய நாளில், நாம் அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகின்றேன்.



## கொடி நாள்:

# நிதி திரட்டும் பணியை மாண்புமிகு முதல்வர் தொடங்கி வைத்தார்

**இந்தியா முழுவதும் 'கொடி நாள்' கொண்டாடப்படும் 7.12.93 அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, அரசு பொதுத்துறைச்செயலாளர் திரு. பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். குப்புசாமி மற்றும் முன்னாள் படை வீரர்கள் நலத்துறை இணை இயக்குநர் கேப்டன் பாரதி ஆகியோர், அவரது இல்லத்தில், கொடி நாள் நிதி திரட்டுவதற்காகச் சந்தித்தார்கள்.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கொடி நாள் நிதி உண்டியலில் தமது காணிக்கையாக ரூ.10,800-ஐ வழங்கி கொடி நாள் நிதி திரட்டும் பணியைத் தொடங்கி வைத்தார்.**



## வரலாறு காணாத வகையில்
## 1994-95-ஆம் ஆண்டு திட்டத்திற்கு

# ரூ.2,750 கோடி ஒதுக்கீடு

இதுவரை எந்த ஆண்டிலும் கிடைக்காத அளவுக்கு 1994-95-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கென ரூ.2,750 கோடியைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் பெரும் சாதனை படைத்துள்ளார்கள். இந்தத் தொகைக்கான ஒப்புதலை, திட்டக்குழு வழங்கி தமிழக அரசின் சிறப்பான பணிக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

1994-95-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்ட மதிப்பீடு குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 11.12.1993 அன்று மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு பிரணாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும், தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி.குழந்தைவேலு அவர்களும், தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்களும், நிதித் துறைச் செயலர் திரு என். நாராயணன் அவர்களும், முதல்வரின் செயலர் திரு வரதராஜூலு அவர்களும் உடன் சென்றிருந்தார்கள்.

1992-93-ஆம் ஆண்டிற்கு, திட்டக்குழு ரூ.1766.75 கோடிக்கான ஒப்புதல் அளித்திருந்தாலும், ரூ.1,935 கோடி அளவுக்குத் தமிழ்நாடு அரசின் திட்ட நிறைவேற்றம் இருந்தமைக்குத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் திரு பிரணாப் முகர்ஜி தம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார். மிகச் சிறந்த சாதனையைத் தமிழக அரசு புரிந்ததற்குத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டின் தற்போதைய வளர்ச்சி விகிதம் 5 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதாகவும், இது குறைந்தபட்சம் 8 சதவிகிதம் ஆகவாவது உயர்த்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்திய சிங்கப்பூர் வர்த்தக மையத்தைச் சென்னையில் அமைப்பதற்கு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென்றும் முதல்வர் அவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் திட்டக்குழுவிடம் வலியுறுத்தினார்.



தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவேற்ற, தென்மாநில எரிவாயு இணைப்புத் திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டிய தன் அவசியத்தை முதல்வர் வலியுறுத்தினார். இந்தத் திட்டத்திற்கு, தென் மாநிலங்கள் கூட்டு முதலீடு செய்யலாம் என தான் ஆலோசனை வழங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும் அடிப்படை வசதித்துறைகள் சிலவற்றில் மத்திய அரசு முதலீடு செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். தீபகற்ப இந்தியாவில் ஓடும் நதிநீர் இணைப்பை, குறிப்பாக மேற்கு நோக்கி ஓடும் நதிகளைக் கருத்தில் கொண்ட திட்டங்களை, உடன் தொடங்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கூடங்குளம் அணுமின் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். நெய்வேலியில் 3-வது சுரங்கம் வெட்டும் திட்டத்தில் நிதி வழங்குவதில் புதிய அணுகுமுறை வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மாநிலத்தில் திட்டமிடப்பட்டுள்ள தனியார் துறை மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதில் உள்ள இடர்ப்பாட்டையும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் இணைப்பிலுள்ள சிக்கலைத் தீர்க்க, திட்டக் குழுவின் துணைத்தலைவர் அவர்கள் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். மரபு சாரா சக்தி ஆதாரங்களை, குறிப்பாக காற்றுச் சக்தியை பயன்படுத்திக்கொள்வதில், தமிழ்நாடு படைத்துள்ள மிகச் சிறந்த சாதனையை அவர் எடுத்துக் கூறினார்.

1994-95-ஆம் ஆண்டில் புதிய பெருநகர் சீரமைப்புத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவியாக ரூ.50 கோடி அளிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். பெருநகரச் சீரமைப்புத் திட்டத்திற்கு, கொங்கன் இரயில்வே திட்டத்தின் அடிப்படையில் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

தமிழ்நாடு எதிர் நோக்க வேண்டியுள்ள சில தனிப்பட்ட பிரச்சினை பற்றியும் முதல்வர் எடுத்துரைத்தார். தேசிய சராசரி அளவில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் இருப்பதால், நிபுணர்கள் சுட்டிக்காட்டியபடி 1987-88-ஆம் ஆண்டில் வறுமை நிலை 45.13 சதவிகிதமாக இருந்தது என்பதை எடுத்துரைத்தார். மேலும், தனிப்பட்ட சுற்றுச் சூழல் பிரச்சினைகளுடன் கூடிய 'நீண்ட கடற்கரை', கடல் எல்லை பிரச்சினை, எல்லாவற்றுக்கும் மேலாக புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்படும் சேதங்கள் ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துரைத்தார். எனவே, வெள்ளத்தடுப்புக்கான கட்டமைப்புப் பணிகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ள அடுத்த நிதியாண்டில் ரூ.100 கோடியை மத்திய அரசு வழங்கவேண்டுமென்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

விரிவான விவாதங்களின் பயனாகவும், 1993-94-ஆம் ஆண்டிலும் இந்த நிதியாண்டிலும் தமிழ்நாடு அரசு நிகழ்த்தியிருக்கிறது மாபெரும் சாதனையைக் கருத்தில் கொண்டும், 1994-95-ஆம் ஆண்டுக்கு ரூ.2,750 கோடி நிதி ஒதுக்கீடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இது 1993-94-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டைவிட 30.89 சதவிகிதம் கூடுதல் என்னும் அளவில் ஒரு புதிய சாதனையாக அமைந்து உள்ளது.

வேளாண்மை, ஊரக வளர்ச்சி, நீர்ப்பாசனம் ஆகியவை தொடர்ந்து முக்கியத்துவம் பெறும் 1993-94-இல் 379.93 கோடி ரூபாயாக இருந்த இவற்றுக்கான ஒதுக்கீடு ரூ.424.77 கோடி ரூபாயாக இருக்கும். 662.36 கோடி ரூபாயாக இருந்த தொழில் மற்றும் மின் சக்திக்கான மொத்த ஒதுக்கீடு இனி ரூ.891.09 கோடியாக இருக்கும். ரூ.212.79 கோடியாக இருந்த போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.293.47 கோடியாக உயர்த்தப்படும். சமூகநலம் தொடர்ந்து முன்னுரிமை பெறும். அதற்கான ஒதுக்கீடு ரூ.268.23 கோடியிலிருந்து ரூ.312.68 கோடியாக உயரும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக் கான ஒதுக்கீடு ரூ.99.09 கோடியிலிருந்து ரூ.149.96 கோடியாக உயரும். குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.276.21 கோடியிலிருந்து ரூ.456.90 கோடியாகப் பெரிதும் உயரும்.







# புயலாலும் பெரும் மழையாலும் சேதமடைந்த பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்

## பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரிசி, புடவை, வேட்டி முதலான நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்

கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்த பெரு மழையின் காரணமாகவும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும், தமிழ்நாட்டில் பல நீர் நிலைகளும், ஏரிகளும் பெருகி நிரம்பி வழிந்ததால், மேலும் தொடர்ந்து மழை பெய்தால் சேதம் ஏற்படக் கூடும் என்ற நிலையில் ஆய்வுகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், எல்லா மாவட்ட நிர்வாகங்களும் நிவாரணப் பணிகளை, துரிதமாகப் போர்க்கால அடிப்படையில் மேற்







கொள்வதற்கு வேண்டிய ஆயத்த ப் பணிகளை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டுமென ஆணையிட்டு இருந்தார்.

3.12.1993 மற்றும் 4.12.1993 ஆகிய நாட்களில் சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென் ஆர்க்காடு-வள்ளலார், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கடும் மழையும் சூறாவளிக் காற்றுடன் கூடிய புயலும் வீசக்கூடும் என்ற விவரம் அறிந்தவுடன், இந்த மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களுக்கு, நீர்நிலைகளின் அருகில் வாழும் மக்களையும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களையும், முன்னெச்சரிக்கையாகப் பாதுகாப்பான இடங்களில் கொண்டு செல்ல வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார். மேலும் புயல் கரையைக் கடந்தவுடன், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, நிவாரணப் பொருட்களையும், அரிசி போன்ற இன்றியமையாத பொருட்களையும், தேவையான அளவிற்குச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வருவாய் நிர்வாக ஆணையாளர் மூலமாக மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நீர்நிலைகள், சென்னை நகரத்திற்கு குடிநீர் கொண்டு வரும் 3 முக்கிய ஏரிகள், பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள மிக முக்கியமாக ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் ஆகியவற்றின் நீர் மட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் , நீர்நிலைகள் ஏரிகள் சேதம் அடையாமல் இருப்பதற்கு வேண்டிய தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தி வந்தார். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கச் செய்து, மாநில நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைக்கச் செய்தார். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலை காரணமாக, புயலால் ஏற்படவிருந்த பொருட்சேதமும், உயிர்ச் சேதமும் வெகுவாக குறைக்கப்பட்டன.


4.12.1993 அன்று நாகப்பட்டினம், காரைக்காலுக்கும் இடையே புயல் கரையைக் கடந்தவுடன், புயல் காரணமாகவும், பெரும் மழையின் காரணமாகவும் சில மாவட்டங்களில் ஏற்பட்ட பொருட் சேதங்களையும், உயிர்ச் சேதங்களையும் உடனுக்குடன் அறிந்து ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயல் கரை கடந்துவிட்ட சூழ்நிலையில், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிட்டார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கியச் சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடியதால் ஏற்பட்ட பாதிப்புகளை உடனடியாகக் கண்டறிந்து, சீர் செய்ய வேண்டுமென நெடுஞ்சாலைத் துறையினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். அதேபோல், ஏரிகள், நீர்நிலைகள் மற்றும் பாசன ஆதாரங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாகச் சரிசெய்ய வேண்டுமென, பொதுப்பணித்துறையினருக்கும், புயல் காற்றினால் மின் கம்பங்கள் சில சாய்ந்துவிட்ட காரணத்தினால், மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல்களை உடனடியாகச் சீர் செய்து மிக விரைவில் இயல்பான மின்சார விநியோகத்தைத் தொடங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மின் வாரியத் தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கு ஆணை வழங்கினார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோர் தங்கள் துறைகளின் கீழ் உள்ள அதிகாரிகளின் பணிகளை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட இடங்களில் பணிகளை முடுக்கிவிட வேண்டுமென அறிவுறுத்தினார்.

புயல் மற்றும் பெரு மழையின் காரணமாக இதுவரை 61 பேர் மரணம் அடைந்ததை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிக்க துயரமும், வருத்தமும் அடைந்தார்கள்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத்-20, தென் ஆற்காடு-வள்ளலார் - 9, திருச்சிராப்பள்ளி-5, தஞ்சாவூர்-10, சேலம்-8, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்-2, சென்னை-2, தருமபுரி-2, திருவண்ணாமலை-சம்புவராயர்-1, விழுப்புரம்-2.



நாகப்பட்டினத்தில் புயல் வெள்ளத்தால் பாதிகப்பட்ட இடங்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார் (6.12.'93).

பெருமழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும், இறந்து போனவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 10,000 ரூபாய் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

4.12.1993 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களுடன், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், தென் ஆர்க்காடு-வள்ளலார், தஞ்சாவூர், ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டு உள்ள சேதங்கள் குறித்து ஆய்வு செய்த பின்பு உடனடியாக, இம் மாவட்டங்களுக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளைத் துரிதப் படுத்தி, கண்காணிக்குமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுப்பி வைத்தார். ஆனால், சென்னையிலிருந்து நாகப் பட்டினம் வரையில் நெடுஞ்சாலையில் பல இடங்களில் மரங்கள் விழுந்ததாலும், சாலைகள் வெள்ளத்தால் அரிக்கப்பட்டதாலும், சாலை வழியே செல்ல இயலவில்லை. எனவே, அவர் திருச்சி வரை விமானம் மூலம் சென்றார். .பின்னர் சாலை வழியே நாகப்பட் டினம் சென்றார்.

அவருடன், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என்.ராமதாஸ் அவர்களும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக உடன் சென்றார்கள். சாலையில் பல இடங்களில் தடைகள் இருந்ததால், பல இடங்களைச் சுற்றிக் கொண்டு, 20 மணி நேரத்திற்குப் பின்பு நாகப்பட்டினம் சென்றடைந்தனர்.

5.12.1993 அன்று, நாகப்பட்டினம், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரங்களையும் விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மாவட்டங்களில் உள்ள சேதங்களை உடனடியாக தானே நேரில் பார்வையிட வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். சாலை வழியே இந்தப் பகுதிகளுக்கு சென்று பார்வையிட முடியாது என்ற சூழ்நிலையில் 6.12.1993 அன்று காலை 10.30 மணிக்கு சென்னையிலிருந்து ஹெலிக்காப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புறப்பட்டு, கடற்கரையை ஒட்டித் தாழ்வாகப் பறந்தபடி, புயலாலும், பெருமழையாலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட வண்ணம் சென்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சதுரங்கப்பட்டினம் கடற்கரைப் பகுதியைப் பார்வையிட்டார். பின்பு சதுரங்கப்பட்டினத்திலிருந்து நாகப்பட்டினம் வரையில் உள்ள கடலோரப் பகுதிகளிலும், கிராமங்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டார். குறிப்பாக, கடலூர், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், பரங்கிப்பேட்டை, நாகூர் ஆகிய இடங்களை ஹெலிக்காப்டரில் இருந்து பார்வையிட்டார்.

பகல் 12 மணி அளவில் நாகப் பட்டினம், காவல் துறை ஆயுதப் படை மைதானத்தில் வந்து இறங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம், வருவாய் நிர்வாக ஆணையர் திரு சி.என். ராமதாஸ், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சவார்கர், கூடுதல் டி.ஜி.பி திரு வால்டர் தேவாரம், மாவட்ட அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியம், சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் வரவேற்றார்கள்.

அங்கிருந்து அணி வகுப்பு மைதானத்திற்குச் சென்று, அங்கே திரண்டிருந்த 1000-க்கும் மேற்பட்டவர்களுக்கு அரிசியும், புடவை-வேட்டி மற்றும் உதவித் தொகையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். வீடு இழந்த மக்களும், புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களது பிரச்சினையை எடுத்துக் கூறிய போது, அவர்களது குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து, மாவட்ட ஆட்சித்தலைவரிடம் உடனடியாக அவர்களது குறைகளைக் களைய வேண்டும் என்று ஆணையிட்டார்கள். ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பின்பு நாகப்பட்டினம் அரசு விருந்தினர் மாளிகைக்குச் சென்றார்.

அங்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செய



லாளர், திரு டி.வி. வெங்கட்ராமன், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என். ராமதாஸ், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சவார்கர் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன், புயல் மற்றும் வெள்ளப் பெருக்கத்தால் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி விவாதித்து, தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து அறிவுரை வழங்கினார். இந்தக் கூட்டம் சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்றது.

இந்த ஆண்டு கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ் நாட்டில் பெய்த மழையாலும், பெருகி ஓடிய வெள்ளத்தாலும், தற்போது நாகப்பட்டினம் அருகே வீசிய புயலாலும், அதனால் ஏற்பட்ட சேதங்களின் மொத்த மதிப்பு 666 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பொதுப் பணித் துறையின் கீழுள்ள ஏரிகள், நீர் நிலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள், நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள நெடுஞ்சாலைகளுக்கும் மற்றும் சாலைகளுக்கும் ஏற்பட்ட சேதங்களைச்செப்பனிடத்தேவையான நிதியையும், பயிர்களுக்கும், குடியிருப்புகளுக்கும் கட்டடங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களையும் கணக்கிடும் போது, மொத்த சேதத்தின் மதிப்பு 666 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடலோரக் கிராமங்களில், புயல் மற்றும் பெருமழையால் கடலுக்குள் பல கட்டுமரங்களும், சிறு படகுகளும் அடித்துச் செல்லப்பட்டதைக் கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர், காணாமல் போன படகுகள் மற்றும் சேதமடைந்த படகுகள் பற்றிய விவரங்களைக் கணக்கெடுத்து, அந்த மீனவர்களின் மறுவாழ்விற்கு, மானிய விலையில் மீன்பிடி படகு, மீன்பிடி வலை போன்ற உபகரணங்களை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என ஆணையிட்டார்.

கடலோர கிராமங்களிலும், மற்றும் பெரிய நீர்நிலைகளில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், பயிர்கள் பாதிக்கப்பட்ட இடங்களை உடனடியாக ஆய்வு செய்து பயிர் பாதிக்கப்பட்ட, விவசாயிகளுக்கு உடனடியாக மானிய விலையில் விதை, உரம் போன்ற விவசாய இடுபொருட்களை வழங்கி மீண்டும் அவர்கள் விவசாயத் தில் ஈடுபட ஆவன செய்ய வேண்டும் என ஆணையிட்டார்கள். ஏற்கெனவே இதுகுறித்து ஆணை வழங்கப்பட்டு, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம், கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள மின்கம்பங்கள், புயலால் வளைந்து, தெளிந்து சேதமடைந்து விட்டதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக அருகில் உள்ள மாவட்டத்திலிருந்து 200 மின்வாரிய ஊழியர்களை இங்கு அனுப்பி வைத்து, விரைவில் அவற்றைச் சீர் செய்து, இயல்பான மின்சார விநியோகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டார்.

மின்சாரம் கிடைக்கும் வரை மண்ணெண்ணெய் அதிக அளவில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஆணையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்திற்கு மாதந்தோறும் 2,213 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கப்பட்டு, நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதத்திற்குக் கூடுதலாக இன்னும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாகக் கூடுதலாக இந்த மாவட்டத்திற்கு 2,213 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து அதனையும் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைக்கு விநியோகம் செய்யும்படி ஆணையிட்டார்.

நாகபட்டினம், தஞ்சாவூர் மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டங்களில் நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் போர்க்கால அடிப்படையில் சீர் செய்து, செப்பனிட வேண்டும் என்றும் விரைவில் போக்குவரத்துக்கு உகந்ததாகச் செய்ய வேண்டும் என்றும் நெடுஞ்சாலைத் துறையினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

மேலும், அருகில் உள்ள மாவட்டத்தில் இருந்து கூடுதலாகப் பணியாளர்களை அனுப்பி வைத்து மராமத்துப் பணியை முடுக்கி விட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

காலரா போன்ற கொடிய தொற்று நோய் பரவுவதற்கு வாய்ப்



புகள் உள்ளதால், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும், மக்களுக்குக் காலரா தடுப்பு ஊசிகளைப் போட வேண்டும் என்றும், மருத்துவ மற்றும் மருத்துவப் பணியாளர்கள் சுமார் 200 பேரை இந்தப் பகுதிகளுக்கு அனுப்பி, எல்லாப் பொதுச் சுகாதாரப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்தச் சூறாவளிக் காற்றால், பல முதிர்ந்த, பழைய மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டதால், பல இடங்களில் மரங்களை வெட்டி எடுக்கும் பணி நடைபெறுவதைப் பற்றிக் கேட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இனி வருங்காலத்தில் விரைவில் மரங்களை அறுத்து அப்புறப்படுத்த 'Power Saw' வாங்கி, நெடுஞ்சாலைத் துறையினர் உபயோகிக்க வேண்டும் என்று ஆணையிட்டார். மிக அதிகமான மரங்கள் குவியலாக ஏலத்தில் விற்கும் முறையை மாற்றி, வனத் துறையினர் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து ஏலம் விட்டால், விரைவில் மரங்களை விற்று அப்புறப்படுத்த முடியும் என்ற கருத்தை ஏற்று, விரைந்து அதை செயல்படுத்த ஆணையிட்டார்.

Ham Radio ஒன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு முன் கூட்டியே வழங்கப்பட்டதால், புயல் மற்றும் வெள்ளச் சேதங்களை விரைவில் சென்னைக்கு தெரிவிக்க முடிந்தது என்பதையும், நிவாரண உதவிகளை விரைந்து கொடுக்க முடிந்தது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கூறினார். தனது ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

குடிசைகள் மற்றும் வீடுகள் இழந்தவர்களின் கணக்கெடுப்பினைத் துரிதப்படுத்தி, இன்னும் 3 தினங்களுக்குள் அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகை மற்றும் நிவாரண உதவிகளைப் போர்க்கால அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும், தேவைப்பட்ட அளவிற்கு உணவுப் பொட்டலங்களையும், அரிசி போன்ற அத்தியாவசியமான பொருட்களையும் வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். நிவாரண உதவிகளை வழங்குவதில், விரைந்து செயல்பட வேண்டும் என்றும், தற்போது எவ்வளவு பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகிறது, எவ்வளவு குடும்பத்தினருக்கு இலவசமாக 5 கிலோ அரிசி, மண்ணெண்ணெய் , வேட்டி, சேலை வழங்கப்படுகிறது என்பதையும் மண்ணெண்ணெய் கேட்டு அறிந்தார்.

பின்னர், பகல் ஒரு மணி அளவில் ஹெலிக்காப்டர் மூலம் நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு கரையோரமாகத் தாழ்வாகப் பறந்து, வேளாங்கன்னி, முத்துப்பேட்டை, வேதாரண்யம், பாய்ன்ட் காலிமர் (Point Calimer) ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். பின்னர், திருச்சியிலிருந்து சிதம்பரம் வரை ஹெலிக்காப்டர் மூலமாகக் காவேரி ஆற்றில் கரை புரண்டு ஓடும் பல இடங்களையும், அங்கே ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களையும் பார்வையிட்டார். பிற்பகல் 3.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பியவுடன், மாண்புமிகு பாரதப் பிரதமர் தமிழ் நாட்டில், புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிடுவதற்காக, மாண்புமிகு மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பல்ராம் ஜாக்கர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அனுப்ப இருப்பதாக உள்ளார் என்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமரின் அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். மத்திய ஆய்வுக் குழு பார்வையிட்ட பின்பு, சென்ற ஆண்டு, மத்திய அரசு முன்பணம் வழங்கியது போல அல்லாமல் இந்த முறை தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

## Rate of Interest on Deposits
(Effective from 2.9.1993

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



மதுரை மாவட்டம்:

# தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் தரிசு நிலங்கள் பலவேறு காரணங்களால் சாகுபடி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. பொதுவாக எந்த நிலத்திலும் ஏதாவது ஒரு செடியையோ அல்லது மரத்தையோ வளர்ப்பதற்கு வாய்ப்புள்ளது. எந்தச் செடி அல்லது மரம் அந்தப் பகுதியில் வளரும் என்பதைத் தெரிந்து திட்டமிட்டுச் செயல்படுத்தினால் நல்ல முறையில் பயன்பெற வாய்ப்புள்ளது.

இந்தத் தரிசு நிலங்களில் ஏதாவது பயிர் அல்லது மரங்கள் பயிரிட்டு, அதிலிருந்து வருமானம் பெற்று, விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

தரிசு நிலங்களில் பயன்தரும் மரக்கன்றுகள், பலன் தரும் பழக்கன்றுகளை நட்டு- அதில் ஊடு பயிராகக் குறைந்த வயதுடைய தீவனப்பயிர், தானியப்பயிர், பயறு வகைப்பயிர் ஆகியவற்றில் ஏதாவதொன்றை ஊடுபயிராகப் பயிரிட்டு, நிலத்தை மேம்படுத்துவதுடன் விவசாயிகளின் பொருளாதாரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்ட திட்டம்தான் 'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்'.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு எக்டேருக்கு அரசு மானியமாக ரூ.1500/-ம் விவசாயிகள் பங்குத் தொகையாக ரூ.1,000/-ம் ஆக மொத்தம் ரூ.2,500/- கீழ்க்கண்டவாறு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. தரிசு நிலங்களில் காணப்படும் முட்கள் புதர்களை அகற்றுதலில் விவசாயிகளின் பங்குத் தொகை ரூ.200, மொத்த செலவு ரூ.200.


2. டிராக்டர் மூலம் ஆழமாக உழவு செய்தலில் அரசு மானியம் ரூ.400, மொத்த செலவு ரூ.400.


3. குழிகள் எடுத்தல், தொழுஉரம்/கம்போஸ்ட் இடுதல் கன்றுகள் வாங்கியது நடவு செய்தல் போன்ற பணிகளில் அரசு மானியமாக ரூ.1,000, விவசாயிகளின் பங்குத்தொகை ரூ.500, மொத்த செலவு ரூ.1,500.

4. ஊடுபயிர் சாகுபடிச் செலவு (விதை முதல் அறுவடை வரை) அரசு மானியமாக ரூ.100, விவசாயிகளின் பங்குத்தொகை ரூ.300, மொத்த செலவு ரூ.400.

மதுரை மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3.750 இலட்சம் செலவில் 250 எக்டேரிலும் 1992-93-ஆம் ஆண்டு ரூ.11.250 இலட்சம் செலவில் 750 எக்டேரிலும் செயலாக்கப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டில் ரூ.11.250 இலட்சம் செலவில் 750 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மா, முந்திரி, வேம்பு, புளி, இலவு, கருவேல் முதலிய மரங்கள் பயிரிடப்படுகின்றன.

இத்திட்டத்தின் சிகரமாக ஆண்டிபட்டி வட்டத்தில், மயிலாடும்பாறை ஒன்றியத்தில் உள்ள கணவாய்ப்பட்டி கிராமத்தில் 1992-93-ஆம் ஆண்டு 100 எக்டேர் பரப்பில் இத்திட்டத்தின்மூலம் 10,000 மா மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு, தற்போது நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. 95 சத கன்றுகள் தற்போது உயிருடன் செழிப்பாக உள்ளன. இதனால் 84





விவசாயிகள் பலனடைந்துள்ளனர். இவர்கள் தங்களுக்குள் ஒரு குழு ஏற்படுத்தி, இந்த மரக் கன்றுகளைப் பராமரித்து வருகின்றனர். இதில் சிறப்பு அம்சம் என்னவெனில்- இதில் பங்கு பெறும் விவசாயிகளே அருகில் உள்ள விருமா னூத்து மலையின் மேலிருந்து மெலிதாக- இயற்கை யாக வரும் ஊற்றிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து சிறுசிறு தொட்டிகள் அமைத்து அதில் இந்த நீரைச் சேமித்து, அதி லிருந்து நடவு செய்யப்பட்ட கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பராமரித்துவருகிறார்கள்.

கணவாய்ப்பட்டி பகுதியில் ஏறத்தாழ 200 எக்டேர் நிலப்பரப்பில் முட்புதர்கள் மற்றும் செடிகள் வளர்ந்து இந்த நிலம் விவசாயத்திற்கு இலாயக்கற்ற நிலையில் இருந்தது. இதில் ஒட்டு மொத்தமாக 100 எக்டேர் நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டு மொத்தம் 84 விவசாயிகள் பயன் பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனுடைய பயனை அறிந்த அருகில் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தில் பங்கு பெறுவதற்கு முன்வந்துள்ளார்கள். ஆகவே நடப்பு ஆண்டில் 1993-94 மேலும் 34 விவசாயிகளுடைய 100 எக்டேர் நிலப்பரப்பில் முந்திரி சாகுபடி செய்யச் செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவைகளை முன்னோடியாகவும், மாதிரி யாகவும் கொண்டு, தரிசு நிலங்கள் இருக்கும் விவசாயிகள் அந்த நிலங்களுக்கேற்ற மரக் கன்றுகளை நட்டு, நாட்டின் வளங்களைப் பெருக்கி அவற்றின் பலன்களைத் தாங்களும் தங்கள் சந்ததியினரும் பெற்றுப் பலனடையலாம்.

முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்திலுள்ள கணவாய்ப்பட்டி கிராம விவ சாயக் குழுத் தலைவர் திரு. எம். முத்துசாமி அவர்களைச் சந்தித்து இந்தத் திட்டம் குறித்துக் கேட்டபோது அவர் கூறினார்.

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 20.4.'92 அன்று சென்னை கோட்டையில் சந்தித்து இதுபற்றி மனுக் கொடுத்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் கோரிக் கையைப் பரிசீலனை செய்யுமாறு விவசாயத் துறைக்கு உத்தரவிட்டார்கள். இதன்படி ஆண்டிப் பட்டி மதுரை மாவட்ட உதவி வேளாண்மை இயக்குநர் அவர்களைச் சந்தித்தோம். விவசாயத்

## மது(ை)ர இசை!

மதுரை மாநகரில், இசைத்துறையில் புகழ்பெற்ற மேதைகள் பலர் இருந்தனர்; அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்கள்- மதுரை மணி ஐயர் (1912-1968), நாதகர இசைமேதை வித்வான் பொன்னுசாமி பிள்ளை (1879-1929)- அவருடைய பிள்ளைகளும், பேரன்களுமான நடேசபிள்ளை, சண்முகம் பிள்ளை, எம்.பி.என். சேதுராமன், எம்.பி.என். பொன்னுசாமி, நாதகர இசையில் தேர்ச்சிபெற்ற பெண்மணியான திருமதி எம்.எஸ். பொன்னுத்தாய், இசைப்புலவர் மாரியப்ப சுவாமிகள், பாஸ்கரதாஸ் (1892-1952), நாகசாமி பாகவதர் (1894-1951), டாக்டர் மதுரை சோமு, டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி, டி.என். சேஷகோபாலன், டி.எம். சௌந்திரராஜன், நாகசாமி பாகவதர், இளையராஜா.

★ மதுரை மாநகரில் உள்ள ஸ்ரீசத்குரு சங்கீத சமாஜம், டாக்டர் ராஜாசர் முத்தையா



செட்டியாரால் மதுரையில் உருவாக்கப்பட்ட தமிழிசைச் சங்கம் ஆகியவை நாளும் இசை பரப்பும் நற்றொண்டாற்றி வருகின்றன. மதுரை தமிழிசைச் சங்கத்திற்காகத் தல்லா குளத்தில் 'ராஜா முத்தையா மன்றம் பிரம்மாண்டமான அளவில் உருவாக்கப்பட்டுள்ளது.


★ தமிழ்நாடு மாநில அரசின் இசைக் கல்லூரிகளில் ஒன்று மதுரை மாநகரில்- மானகிரியில் உள்ளது. சங்கீத வித்வான், வாத்ய விசாரதா, நாட்டிய விசாரதா ஆகிய சிறப்புப் பட்டங்கள் இக்கல்லூரியில் வழங்கப்படுகின்றன.

தொகுப்பு: த.செ. சுப்பிரமணியன்
உதவி மக்கள் தொடர்பு அதிகாரி
மதுரை.

துறை எங்கள் கோரிக்கையை ஏற்றுச் செயல் படுத்த முழு ஒத்துழைப்பு நல்கியதோடு ஊக்கமும் அளித்தது. நாங்களும் விவசாயத் துறையுடன் நன்கு ஒத்துழைத்து இந்தப் பகுதியில் சுமார் 30 ஆண்டுக்காலமாக விவசாயம் செய்யப்படாமல் தரிசாக இருந்த 100 எக்டேர் நிலப்பரப்பில் மாங்கன்றுகள் நட்டு நன்கு பராமரித்து வருகிறோம். ஒரு எக்டேருக்கு 100 மாங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் ஒரு எக்டேருக்கு அரசு மானியமாக ரூ.1,500/- வழங்கப் பட்டது.


விவசாயத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர் வாரம் ஒரு முறையும், உதவி வேளாண் இயக்குநர் மாதம் ஒரு முறையும் இங்கு வருகை புரிந்து மாங்கன்றுகளைப் பார்வையிட்டுத் தகுந்த ஆலோசனை வழங்குகிறார்கள்'' என்றார்.

விருமானூத்து மலையிலிருந்து இயற்கையாக வரும் தண்ணீரை அங்காங்கே சேமித்து வைக்க 264 கனஅடி கொள்ளளவு கொண்ட 14 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு தண்ணீர் சேகரிக்கப்பட்டு மாங்கன்றுகளுக்கு எடுத்து ஊற்றப்படுகிறது.



மாங்கன்றுகளுக்கு இடையில் ஊடு பயிராக (Inter crop) கடலை, உளுந்து, துவரை போன்றவைகளும் பயிர் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நிலத்தின் மதிப்பு முன்பு தரிசாக இருந்தபோது, ஏக்கருக்கு ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரை இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் தரிசு நில மேம்பாட்டுத்



1980-ல் கோவலன் பொட்டல் என்ற இடத்தில், தொல் பொருள் ஆய்வுத் துறையினர் அகழ்வாய்வு மேற்கொண்ட போது ஆறடிக்கு மேற்பட்ட மனித எலும்புக் கூடுகளெல்லாம் கிடைத்தன; இப்பகுதியிலேதான் கோவலன் தலை வெட்டப் பட்டதாம்; அப்படியொரு பாறை, சிறு கட்டடமொன்றினுள் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது.



திட்டத்தின் செயல்படுத்தப்பட்ட பிறகு இங்கு நிலத்தின் மதிப்பு ஏக்கருக்கு ரூ.4,500/- முதல் ரூ.5,000/- வரை உயர்ந்துள்ளது. என்றார் விவசாயக் குழு செயலர் திரு சாமிக்கண்ணு அவர்கள்.

மலையின் மேலே உள்ள நீரூற்றை நாமும் போய்ப் பார்த்தோம்; தனித்த சுவையோடு இருந்தது அந்த நீர். ஆண்டு முழுவதுமே அந்த நீர்வரத்து நிற்பதில்லையாம்; அங்கிருந்த மலை






வாழ் மக்களில் ஒருவரான மூதாட்டி பூவாத்தா இதைத் தெரிவித்தார்.


கிராம வளர்ச்சி மன்றக் குழுவினருள் ஒருவரான திரு. பழனிச்சாமி- அங்கிருந்த இரு கல்தூண்களை நமக்குக காட்டி, ''ஒரு காலத்தில் இந்த மலைச் சரிவிலேதான் மாலிக்காபூர் படைவீடு அமைத்திருந்தானாம்!'' என்றார்.

—ஜே. சந்திரன்

மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபம்.



# மதுரை மாநகராட்சி



தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் மதுரை ஆகும். இது சென்னைக்குத் தெற்கே 500 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் பழங்கால 'நித்தியாவர்தா' என்னும் நகரமைப்பு நுணுக்கங்களின்படி, வடிவமைக்கப்பட்டதாகும். இந்நகரின் நடுவே உள்ள 'மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கோவிலைச் சுற்றிலும் சதுரவடிவில் சாலைகள் ஒழுங்குற அமைக்கப்பட்டு உள்ளன.

## மதுரை மாநகராட்சியின் வரலாறு

மதுரை நகரியம் 1866-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதன் பரப்பளவு 2.60 சதுர கிலோமீட்டராக இருந்தது. அப்போதைய மக்கள் தொகை 41,600.

மதுரை நகராட்சியாக இருந்த காலத்தில் நகரின் பரப்பளவு 23.05 சதுர கிலோமீட்டராக இருந்தது. அதன்பின் மதுரை நகராட்சி மாநகராட்சியாக 1.5.71-இல் உயர்த்தப்பட்டது. 1974-ஆம் ஆண்டில் மதுரையைச் சுற்றியுள்ள 13 பஞ்சாயத்துப் பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம் மாநகரின் பரப்பளவு 51.85 சதுர கிலோமீட்டராக உயர்ந்தது. 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி மாநகரில் மக்கள் தொகை 9.51 இலட்சமாகக் கணக்கிடப்பட்டது. நாள் தோறும் நகருக்குள் வந்துபோகும் மக்கள் தொகை 3 இலட்சமாகும்.

மதுரை மாநகராட்சி தற்பொழுது 72 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 29.7.1984-ஆம் தேதி முதல் மதுரை மாநகராட்சி தனி அலுவலரின் நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவரே தனி அலுவலராக உள்ளார்.

மதுரை மாநகராட்சியில் கீழ்க்கண்டவாறு வளர்ச்சிப் பணிகள் தீவிரமாக்கப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## சாலைகள்

1. கடந்த ஓராண்டுக் காலமாகச் சாலைகள் ரூ.268 இலட்சம் மதிப்பீட்டில் செப்பனிடப்பட்டு வருகின்றது.

2. கடந்த எட்டு மாதங்களுக்குள் ரூ.60 இலட்சம் மதிப்பில் சாலை மேம்பாட்டிற்கான நவீன இயந்திரங்கள் பிஎம்ஜி மூலமாக வாங்கப்பட்டுள்ளன. (எக்ஸ் சவேட்டர் இரண்டும், டிப்பர் லாரிகள் இரண்டும், டிராக்டர் 5-ம், 12 டிரெயிலர்களும் வாங்கப்பட்டன.)

## பாதாள சாக்கடைத் திட்டம்

கடந்த ஓராண்டுக்குள் 7 இலட்சம் செலவில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. மேலும் 16 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன.

## குடிநீர்

உலக வங்கி உதவியுடன் வைகை குடிநீர்த் திட்டப்பணிகள் ரூ.4852 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 1994-ஆம் ஆண்டு டிசம்பருக்குள் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்ததும் கோடை காலத்திலும் மதுரை மாநகர் மக்களுக்கு நாள்தோறும் 200 இலட்சம் காலன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரத்தையும் அளவையும் மேம்படுத்த ரூ.250 இலட்சம் செலவில் கோச்சடை அருகே வைகை ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் கட்டும் பணி திட்டமிடப்பட்டு, அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## கழிவுநீர்ப்பண்ணை

வைகை ஆற்றின் தென்பகுதியிலிருந்து வரும் பாதாள சாக்கடை, சந்தைப்பேட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் சேர்க்கப்பட்டு பின் அங்கிருந்து அவனியாபுரம் கழிவுநீர்ப் பண்ணைக்குப் பம்ப் செய்யப்படுகிறது. இப்பண்ணை 1910-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இதன் 385 ஏக்கர் நிலத்தில் 185 ஏக்கரில் கினியா புல்லும், 35 ஏக்கர் நிலத்தில் காய்கறி வகைகளும் பயிரிடப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ.20 இலட்சம் ஆகும்.

## மின்சாரம்

மதுரை மாநகராட்சியில் 500 இடங்களில் நான்கு தெருக்கள் சந்திக்குமிடங்களில் சோடியம் வேப்பர் மின் விளக்குகள் ரூ.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன மேலும் ரூ.60

இலட்சம் மதிப்பில் 6-வது கூட்ட மின் நிலையம் அமைக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் நகரின் வடபகுதியில் சீரான மின்சார விநியோகம் செய்யமுடியும்.

### தகவல் மையம் Information Centre

மதுரை மாநகராட்சியில் பொதுமக்களுக்குத் தேவையான அலுவலக விவரங்களை விளக்கிட ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பில் தகவல் மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

### புதிய மழைநீர் வடிகால்கள்

மழையின்போது சிம்மக்கல், பெரியார் பேருந்து நிலையம், புட்டுத்தோப்பு ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்க ரூ.16 இலட்சம் செலவில் புதிய வடிகால்கள் கட்டத்திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### சிறப்புத் திட்டங்கள்

மதுரை மாநகரின் மையப்பகுதியிலுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, நகரின் மையப்பகுதியில் தற்போது இயங்கிவரும் காய்கறி மொத்த அங்காடி, பூ அங்காடி மற்றும் நெல் கமிஷன் மண்டி ஆகியவற்றை நகரின் வடகரையிலுள்ள மாட்டுத்தாவணி பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

★ எது அநீதி? கோபமோ, அச்சமோ, இன்பமோ, துன்பமோ, பொறாமைகளோ, ஆசைகளோ நம்மை ஆட்டி வைக்கும்போது நாம் செய்யும் செயல்களுக்கும் பெயர்தான் அநீதி.

- பிளாட்டோ

### நவீன பேருந்து நிலையம்

நீண்ட காலமாக மதுரை மாநகர மக்களின் கனவாக விளங்கி வந்த நவீன பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மேலூர்ச் சாலையின் நவீன பேருந்து நிலையத்தை ரூ.20 கோடி செலவில் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுவருகிறது. விரைவில் இப்பணி முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பொது சுகாதாரம்

மதுரை மாநகராட்சியில் 15 மகப்பேறு மருத்துவமனைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்திய மக்கட்தொகைத் திட்டம் 5-இன் கீழ் எல்லா மகப்பேறு மனைகளையும் நவீனப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நவீனப்படுத்த ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சம் ஆகும்.

### வாய்க்கால் சீரமைக்கும்திட்டம் (Storm Water Channels Rs.8 Crore Scheme)

மதுரை மாநகர் பகுதியில் பிரதான வாய்க்கால் அனைத்திலும் தூர் வாரி மழை நீரை முறையாக வெளியேற்றுவதற்காக உலக வங்கியின் உதவியோடு ரூ.8 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு விரைவில் செயலாக்கப்படவிருக்கிறது.


## வளமான வாழ்வுக்கு

### மதராஸ் பெர்டிலைசர்ஸ் அளிக்கும்

# விஜய் உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை!

''முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்''.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நீண்டகால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்குச் செயல்படுகிறோம்.

### விஜய் என்றாலே வெற்றி

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
(இந்திய அரசு — பொதுத்துறை நிறுவனம்)
மணலி, சென்னை-600 068



# நலிவுற்ற கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

**கலைமேதைகள் தவத்திரு சங்கர தாஸ் சுவாமிகள், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்,** பாபநாசம் **சிவன், தமிழ் நாடகத் தந்தை பம்மல்** சம்பந்த முதலியார், நாதசுரச் சக்ரவர்த்தி திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் பிள்ளை ஆகியோரது நினைவினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'ஐம்பெரும் விழா' வினைச் சென்னையில் நடத்துவது வழக்கம்.

இவ்வாண்டு மேற்கண்ட கலை மேதைகள் பிறந்து வளர்ந்து புகழ் பரப்பிய மண்ணில் அவர்களது நினைவினைப் போற்றத்தக்க வகையில், விழா எடுக்கவேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டிருந்தார். அதன்படி 3.11.93 அன்று தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாளினை மதுரை சத்குரு சங்கீத சமாஜத்தின் ஒத்துழைப்புடன் மதுரையிலும், 4.11.93 அன்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாளினை குமரி மாவட்ட கிராமியக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நாகர்கோவிலிலும், 5.11.93 அன்று பாபநாசம் சிவன் நினைவு நாளினை ரசிக ரஞ்சன சபா ஒத்துழைப்புடன் திருச்சியிலும், 6.11.93 அன்று நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு நாளினை வாணி விலாச சபா ஒத்துழைப்புடன் கும்பகோணத்திலும் நடத்தப்பட விருக்கின்றன.

மேலும், இக்கலை மேதைகள் விட்டுச்சென்ற கலைகள் இன்றும் இச்சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அழிந்துவிடாமல் பாதுகாத்துவரும், வாழ்வில் நலிவுற்றக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள், மேடைப் பொருட்கள் ஆகியன புதிதாக வாங்குவதற்கென, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, பின்வரும் மானியத் தொகைகள் இந் நினைவு நாட்களில் வழங்கப்பட இருக்கின்றன.

3.11.93 அன்று மதுரை இலட்சுமிசுந்தரம் ஹாலில் நடைபெற இருக்கும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாளன்று மதுரை, பசும்பொன் தேவர், காமராசர் மாவட்டங்களைச் சார்ந்த 78 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.56,450 தொகையும், 4.11.93 அன்று நாகர்கோவில் கலைவாணர் கலை அரங்கில் நடைபெறவிருக்கும் 'கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாளன்று கன்னியாகுமரி நெல்லை கட்டபொம்மன், வ.உ.சி. மாவட்டங்களைச் சார்ந்த 25 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.21,000 தொகையும், 5.11.93 அன்று திருச்சி ரசிக ரஞ்சன சபாவில் நடைபெற இருக்கும் பாபநாசம் சிவன் நினைவு நாளன்று திருச்சி, சேலம், பெரியார், தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த 28 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.26,600 தொகையும், 6.11.93 அன்று கும்பகோணம் வாணி விலாச சபாவில் நடைபெற இருக்கும் நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு நாளன்று தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத் மாவட்டங்களைச் சேர்ந்த 34 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.26,200 தொகையும் அரசு மானியமாக வழங்கப்பட உள்ளது.

இதுதவிர ஏற்கெனவே 30.6.93 அன்று சென்னை மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்ற தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் நினைவு நாளன்று சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சார்ந்த 22 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.23,600 தொகையும், 20.10.93 அன்று சென்னை அரசு இசைக் கல்லூரியின் நடைபெற்ற 'நவ ராத்திரி இசை விழா' நிறைவு நாளன்று திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கார், மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களைச் சார்ந்த 49 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.40,250 தொகையும் அரசு மானியமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நினைவு நாட்களில், ஒவ்வொரு விழா முடிவிலும் பின் வரும் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் கலைமாமணி திரு. ஏ.கே. காளீஸ்வரன் அவர்களின் 'அதிசய சந்தங்களின் அற்புதப் பாடல்கள்' என்ற நிகழ்ச்சியும், மதுரை நாடக நடிகர் சங்கத்தின் சார்பாக 'பவளக்கொடி' நாடகமும் நடைபெறும்.

நாகர்கோவிலில் கலைமாமணி திரு. சி.எஸ். பாண்டியன் குழு வினரின் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் 'வாழ்க்கை' என்ற கலா நிகழ்ச்சியும், குமரி மாவட்ட கிராமியக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கத்தினரின் கணியான்கூத்து சிலம்பம் மற்றும் பாவைக்கூத்து நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

திருச்சியில் சென்னை பிரியா சகோதரிகளின் பாபநாசம் சிவன் கீர்த்தனை திரு. எச். இராமகிருஷ்ணன் அவர்களின் இசை நிகழ்ச்சியும், கும்பகோணத்தில் கலைமாமணிகள் திரு. எம்.பி.என். சேதுராமன்-பொன்னுசாமி குழுவினரின் நாத சுர நிகழ்ச்சியும் நடைபெறும்.

இந்நான்கு நாள் நிகழ்ச்சி களிலும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் இசைப் பேரறிஞர் நாதப்பிரம்மம் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர் களும் உறுப்பினர்-செயலாளர் நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களும் நேரில் கலந்து கொண்டு கலைஞர்களுக்கு அரசு மானியத்தொகைகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள்.

# பெண்களுக்குப் பெருமை தரும் திட்டங்கள்

எஸ். சிதம்பரராமலிங்கம்,
திட்ட அலுவலர்,
மதுரை



ஒரு குடும்பத்தின் சீரான வாழ்விற்குப் பெரும்பாலும் தன்னையே அர்ப்பணித்துக் கொள்பவள் பெண்!

வீட்டில் உள்ள அத்தனைப் பொறுப்புகளையும் ஏற்று நடத்துபவள் பெண்!

குழந்தைகளின் நலன் பேணி நல்வழி நடத்திச் செல்ல நாள் முழுவதும் உழைப்பவள் பெண்!

சமூகத்தின் பார்வையில், பெண் என்பவள் என்றைக்குமே பிறரை நம்பி வாழவேண்டிய சூழ்நிலையில் தான் இன்னும் இருக்கிறாள்.

1. பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.

2. வாழ்க்கையில், சமூகத்தில் பெண்கள் முன்னேற்றம் வேண்டும்.

3. பெண் கல்வி உயர்வு பெற வேண்டும்.

4. பொருளாதார உதவிகள் பெற்று முன்னேற்றமடைய வேண்டும்.

5. கூலி வேலை பார்ப்பவர்கள் நாலு பேருக்குக் கூலிதரும் அளவுக்குத் தொழிலில் முன்னேற்றம் வேண்டும்.

6. மொத்தத்தில் பெண்கள் பெண்களாக, ஆண் பெண் பேதமின்றி உயர்வு பெறவேண்டும்.

-இந்த அடிப்படை நோக்கங்களோடு தோன்றிய திட்டம்தான் தமிழ்நாடு -மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படும் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள்.


நடைமுறையில் பல திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தாலும், இவையனைத்திலும் முற்றிலும் மாறுபட்ட இத்திட்டம், பெண்களால்- பெண்களுக்காகப் பெண்களே ஏற்று நடத்தும் திட்டம் எனக் கூறினால் அது மிகையாகாது. உண்மைதான்; கிராமங்கள்தோறும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் குழுக்களாகச் சேர வேண்டும். அவர்களுடைய நிலை என்ன என்பதை அவர்கள் உணர வேண்டும். அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர என்னென்ன செய்யவேண்டும் என்பதை விவரமறிந்து செயற்பட வேண்டும். சமூக முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றம் இவைகளுக்கு வழிமுறை காணவேண்டும். அவர்களே தங்கள் தேவைக்கேற்ப தொழில்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இதற்கு ஊன்றுகோலாகப் பலர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தொண்டு நிறுவனங்கள் இது போன்ற பணிகளைச் செம்மையாகச் செய்து வருவதால் கிராமங்களில் பெண்கள் குழுக்கள் அமைக்கும் பணி, அவர்களைப் பெண் ஊக்குவிப்பாளர்கள் மூலம் வழி நடத்திச் செல்லும் பணி தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்திட வழி வகுக்கப்பட்டுள்ளது.

மதுரை சுங்குடி சேலைக்குத் தனி மதிப்பு உண்டு; எழுபது என்பது ரூபாயிலிருந்து- எழுநூறு எண்ணூறு ரூபாய் வரை தயாரிக்கப்படுகிறது இது.



சிறு, குறு விவசாயி, தாழ்த்தப்பட்டவர்கள், தினக்கூலிகள் போன்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து சராசரி இருபத்திரண்டு உறுப்பினர்கள் கொண்ட குழுக்கள் சேர்க்கப்படுகின்றன. பின் இக்குழுக்களுக்கு ஓர் ஊக்குவிப்பாளர் ஒரு பிரதிநிதி தேர்வு செய்யப்பட்டு, குழுக்கள் செயல்படத் தொடங்கும். சேமிப்புப் பழக்கத்தை இவர்கள்பால் எடுத்துரைத்து, சிறுகச் சிறுகப் பணம் சேர்க்கவும், சேர்த்த பணத்தைத் தங்களுக்குள்ளேயே கொடுத்து, பின் பெறும் பழக்கத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவர கற்றுத் தரப்படுகிறது.



பாரதியார் தமிழாசிரியராகப் பணிபுரிந்த மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி.

திட்டம் செயல்படும் முன் பல பயிற்சிகள் ஊக்குவிப்பாளர்களுக்கும் தரப்படுகிறது. பயிற்சியில் கலந்துகொண்ட ஊக்குவிப்பாளர்கள் பின் தங்கள் குழுக்களிடம் சென்று பயிற்சியில் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

குழுக்களின் செயல்பாடு, தொண்டு நிறுவனம் மூலம் தரப்படும் பயிற்சியைப் பொறுத்தே இருக்கிறது. இந்தப் பயிற்சியில் சேமிப்பு, செய்திகள் தொடர்பு, துறைகளின் பணி, வங்கிகள் பணி, உடல் பாதுகாப்பு, சத்தான உணவு, பெண்கள் முன்னேற்றம், சட்டரீதியான மேம்பாடுகள், சுற்றுப்புறச் சூழ்நிலைத் தூய்மை, இருக்கின்ற செல்வங்களை முழுமையாகப் பயன்படுத்தும் உத்திகள், குடும்பப் பொருளாதாரம், நிர்வாகம், புதிதாகத் தொழில் செய்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றம், கல்வியறிவு போன்ற பலவும் சொல்லித் தரப்படுகிறது. இதன்பின், பிற துறைகளின் தொடர்பு ஏற்படுகிறது.

வேளாண் பொறியியல் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டுவளர்ப்பு, சிறுதொழில், கால்நடை போன்ற பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும் தங்கள் பகுதியில் உள்ள குழுக்களை அவ்வப்போது சந்தித்து, அவர்கள் தம் செயல்பாடுபற்றி அறிவதோடு தங்கள் துறைகளின் மூலம் நம் நடைமுறையில் உள்ள திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறி, அதனால் ஏற்படும் பலாபலன்கள் பற்றியும் அதற்காகும் செலவு, செலவு செய்வதன் மூலம் பெறப்படும் வரவு போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லித்தந்து குழுக்களில் உள்ள உறுப்பினர்களுக்குத் தேவையான தொழில் துவங்க ஊன்றுகோலாக இருக்கிறார்கள்.

வங்கியின் பணி மிகவும் முக்கியமானது. வங்கி அலுவலர்கள், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குத் தேவையான கடன் தந்திட உறுப்பினர் சேர்ந்துள்ள பணி பற்றித் தீர விசாரித்துப் பின், பணம்

## மகளிர் நலம் ஓங்குக!



இந்நாட்டின் ஏற்றமெல்லாம் இனியநெஞ்சம்
உங்கள் கையில்
இருக்கின்ற வளமெல்லாம் உழைக்கின்ற
உங்கள் கையில்
என்றைக்கும் உழைத்திடுவீர் ஏற்றமுடன்
வாழ்ந்திடுவீர்
உண்மையாய் உழைத்திடுவீர் ஊர்நலம்
காத்திடுவீர்!



விஞ்ஞான முன்னேற்றம் விண்முட்ட உயர்த்திடுவீர்
விவசாய முன்னேற்றம் விளைநிலத்தில்
கண்டிடுவீர்
கண்ணிமைக்கும் நேரத்திலே களர்நிலத்தை
மாற்றிடுவீர்
மண்ணிலையை மாற்றியிங்கே மகசூலைப்
பெருக்கிடுவீர்!




மருத்துவத்தில் மறுமலர்ச்சி மக்களுக்கோ
பெருமகிழ்ச்சி
சிறுகுடும்பம் போதுமென்ற சீரான
நல்லுணர்ச்சி
சிறப்பாக வாழ்ந்துகாட்டும் பொறுப்பான
நன்முயற்சி
முன்னேற்றப் பாதையிலே முறையாகச்
சென்றுவிட்டால்
ஆணென்ன பெண்ணென்ன அத்தனையும்
சரிசமமே
அற்புதங்கள் நடத்தியிங்கே அனைவரையும்
ஏற்கச் செய்வாய்!



உலகத்து மக்களெல்லாம் உமதடியைப்பின்பற்ற
பலகலைகள் பயின்றிடுவீர் பார்போற்ற
வாழ்ந்திடுவீர்!
கண்ணிமைபோல் மகளிர்நலம் காக்கும்
மேம்பாட்டுக் கழகத்தை
வாயார வாழ்த்துகின்றேன் வாழியவே
பல்லாண்டு!

எஸ். சிதம்பர ராமலிங்கம் திட்ட அலுவலர் (IFAD) மதுரை



## மதுரையில் வீட்டுவசதி சாதனைகள்

மதுரை மாவட்டத்தில் 8,672 உயர், மத்திய, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பெற்று ஒதுக்கீடு முறைப்படி செய்யப்பட்டுள்ளது.

1,442 அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1,285 உயர், மத்திய, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகள் யாவும் 31.3.94-க்குள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும் 1,753 வீடுகள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு, வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான 440 வீடுகளும் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் 2,234 வீடுகளும் கட்டி முடிக்கப் பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்கிறார்கள்.

தொண்டு நிறுவனங்கள் பிற துறைகளின் வல்லுநர்கள், வங்கி அலுவலர்கள் ஆகியோரோடு முன்னேற்றத்தை எதிர்நோக்கி இருக்கும் மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு இணைப்புப் பாலமாகச் செயற்படுவதுதான் மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்ட அலுவலகம்.

ஒரு திட்ட அலுவலரைத் தலைமையாகக் கொண்டு வேளாண்-பொறியியல் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டுவளர்ப்புத் துறை, கதர் மற்றும் கிராமக் கைத்தறித் துறை, வங்கி போன்றவற்றின் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்து திட்டங்கள் செம்மையாகச் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பங்கேற்றுப் பயன் பெறும் மகளிர்க்குக் கடன் மற்றும் மானியம் கிடைத்திட வழியுண்டு. தாழ்த்தப்பட்ட மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு 50 சதவிகித மானியம் அதிகபட்சம் ரூ.5,000/- மட்டும் தரப்படும். இதர வகுப்பினருக்கு முறையே குறுநில மகளிர்க்கு 33 ⅓ சதவிகித மானியம் அதிகபட்சமாக ரூ.3,000/- மட்டும் சிறுநில மகளிர்க்கு 25 சதவிகித மானியம் அதிகபட்சமாக ரூ.2,500/- மட்டும் மானியம் தரப்படும்.

இந்த மானியமானது பயனடையும் உறுப்பினருடைய கணக்கில் வங்கியில் வரவு வைக்கப்படும். பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தி முடித்தபின், உறுப்பினருக்கு இந்தப் பணம் திருப்பித் தரப்படும். தொழில் துவங்கியவர்கள் தங்கள் தொழிலை நன்றாகச் செய்து வருகிறார்களா என்பதையும் அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும் கடன் பெற்ற தொகைகள், தவணைகள் தடையின்றிச் சரியாகச் செலுத்தப்படுகிறதா என்பதையும், தொண்டு நிறுவனம், துறையின் அலுவலர்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோர்கள் பயணம் மேற்கொள்ளும்போது உறுப்பினர்கள் சந்தித்து விவாதிப்பார்கள்.

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, திருமங்கலம், கள்ளிக்குடி, சேடப்பட்டி, செல்லம்பட்டி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, டி.கல்லுப்பட்டி, மயிலாடும்பாறை ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட்ட பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, மேயர்டிரஸ்ட், அசபா, பிரதான், ஐ.சி.சி.டபிள்யு ஆகிய நான்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் 5 ஆண்டுகளில் 10,000 மகளிர் முன்னேற்றம் பெற்றிட வேண்டும் என்ற நோக்கோடு செயல்படத் தொடங்கியுள்ள இத்திட்டம் மதுரை மாவட்ட நலிவடைந்த பெண்களுக்குக் கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதம் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.



## நேருவின் கோபம்!


பண்டித நேரு வீட்டில் விசுவாசமுள்ள வேலைக்காரன் ஒருவன் இருந்தான்; அவன்தான் எப்போதும் அவருக்கு உணவு படைப்பான்.

ஒரு சமயம் அவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிர்பிழைத்தான்; மாடிப்படி ஏறக்கூடாது என்று டாக்டர்கள் சொல்லிவிட்டனர். நேருவும் அவனிடம்- "இனி நீ படியேறி எனக்கு உணவு எடுத்து வரவேண்டாம்; அப்படி வருவதானால் எனக்காக உள்ள லிஃப்டிலேயே வரலாம்" என்று சொல்லிவிட்டார்.

அவனும் அப்படியே செய்தான். ஒருநாள் கவனப் பிசகாக, மாடிப் படியேறிப் போய் விட்டான். அதைப் பார்த்தாரோ இல்லையோ; "இப்படி இன்னொரு தடவை நீ படியேறி வருவதைப் பார்த்தால், உன்னைத் திஹார் சிறைக்குள் அடைத்துப் பூட்டச் சொல்லி விடுவேன். ஜாக்கிரதை!" என்று கத்தினாரே பார்க்கலாம்!

வாயடைத்துப் போய்விட்டான் அந்த வேலைக்காரன்!

—'ஆசிய ஜோதி ஜவாஹர்' என்ற நூலிலிருந்து



# பாலையில் சோலைவனம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்தாவது திட்டக் காலத்தில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி பொய்க்கும் பருவமழை மற்றும் சமச் சீரற்ற மழைப்பொழிவு ஆகியவை இம்மாவட்டத் தினை அடிக்கடி வறட்சிக்கு ஆட்படுத்துகின்றன

நிலையான நீர் ஆதாரமோ அல்லது ஆறு களோ இல்லாத நிலையில் ஒழுங்கற்ற மழையும் வேளாண்மையும் அதனைச் சார்ந்த தொழில்களை மிகவும் பாதிக்கின்றன. இந்நிலையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், நசிந்துள்ள பொருளாதார நிலையினை மேம்படுத்துவதுடன் சுற்றுச் சூழலையும் மேம்படுத்துகிறது.

வறட்சியின் தீவிரத்தினைப் போக்கிட செய லாக்கப்படும் திட்டங்கள் நல்லமுறையில் வேகம் பெற்று வருகின்றன. தோட்டக்கலை மற்றும் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிலையான மரங்களுள்ள பரப்பு அதிகரித்து வருகிறது. ஏறத் தாழ 13,610 எக்டேர் நிலத்தில் மரங்கள் வளர்க் கப்பட்டு வருகிறது.

மண்வள அபிவிருத்தி மற்றும் நீர்நிலைப் பாதுகாப்புக்கு 48,570 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டில் பெரிய மற்றும் சிறிய தடுப்பு அணைகட்டுதல் மூலம் மண் அரிப்பினைத் தடுக்கவும் நிலத்தடிநீர் மட்டத்தினை நிலை நிறுத்தவும், பனை விதைகள் நடவு செய்தல் மூலம் மண் அரிப்பைத் தடுத்துமண்பிணைப்பாகச் செயல்படுத்தவும், கோடை உழவு மூலம் நிறைந்த நீர் உறிஞ்சும் மற்றும் நிலை நிறுத்தும் திறனை அதிகரிக்க மற்றும் மேல் மண்ணின் அரிமானத் தைத் தடுக்கவும், செயல்விளக்கப் பண்ணைகள் மூலம் பயறு, சிறுதானியம் மற்றும் சூரியகாந்தி நவீன தொழில் நுட்பங்களைப் பரப்புதலுக்கும், 50 சதவிகிதம் மானிய விலையில் பழச்செடிகள் விநியோகம் செய்தல் மூலம் பழமரங்களின் பரப்பினை அதிகரித்தல் மற்றும் நிலையான வருமான ஆதாரத்தைப் பெருக்கவும், தோட்டக் கலைப் பண்ணை பராமரிப்பும் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில மேம் பாட்டுக்கு 40.450 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பறவைகள் சரணாலயத்தில் வனப் பழத்தோட்டம் அமைத்தல், கண்மாய்க்கரை எரிபொருள் மரத்தோட்டம் அமைத்தல், சவுக்குத்தோட்டம் மற்றும் முந்தைய ஆண்டுகளில் அமைக்கப்பட்ட தோட்டங்களின் பராமரிப்பு கவனித்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

நீர்நில்ல ஆதார மேம்பாட்டுக்கு 34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மூலம் மண்வளம், மண் ஈரம் முதலியவை காக்கப் படுவதுடன் குறைந்த மழையினையும், ஓடும் தண்ணீரையும் சேகரம் செய்யலாம். இதற் காகக் கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் சமுதாயக் கிணறுகளும் அமைக்கப்படுகிறது.

பிற திட்டங்களுக்காக 22.262 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தரிசு நிலங்களில் முந்திரித் தோட்டங்கள் அமைத்தல் மற்றும் புல் பண்ணைப் பராமரிப்பு செய்தல். மேலும் மண்வள மேம்பாட்டுப் பிரிவின்கீழ் புதிய

முயற்சியாகவும் மாநிலத்திற்கே ஒரு முன்னோடித் திட்டமாகவும் இராமேஸ்வரத்தில் உள்ள மண் மேடுகளில் 35 எக்டேர் பரப்பளவில் 'ஜோஜோபா' எனப்படும் எண்ணெய் வழங்கும் தாவரம் வளர்க்கப்படுகிறது.

**மாதிரித் தோட்டக் கலைப் பண்ணை - சுந்தரமுடையான்**

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் சுந்தரமுடையான் கிராமத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 8.56.5 எக்டேர் பரப்பளவில் 1985-86-ஆம் ஆண்டு ஒரு "மாதிரித் தோட்டக் கலைப் பண்ணை" ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய அளவில் தோட்டக் கலை வளர்ச்சிக்கு வழிவகுக்கவும், தரமான பழச் செடிகள் வழங்கும் ஒரு ஆதார நிலையமாக விளங்கிடும் நோக்கோடும் இப்பண்ணை ஆரம்பிக்கப் பட்டன. மேலும், இப்பண்ணையினைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு இதன் மூலம் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

கடற்கரை அருகில் மணற்பாங்கான இடத்தில் அமைந்திருப்பதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமாக உள்ள மணற்பாங்கான இடத்திலும் வெற்றிகரமாகப் பழச்செடிகள் சாகுபடி செய்திட இயலும் என்பதற்கு இப்பண்ணை ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது.

1986-87-இல் நடவுப்பணி தொடங்கப்பட்டு 1987-88-இல் முடிக்கப்பட்டது. மா, கொய்யா சப்போட்டா, முந்திரி, எலுமிச்சை, மாதுளை போன்ற பழ மரங்களும் மல்லிகை, ரோஜா போன்ற மலர்ச் செடிகளும் இங்கு நடவு செய்யப் பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

1988-89-இல் செடிகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு அவ்வாண்டு 55,400 எண்களும், 1989-90-இல் 85,000 எண்களும், 1990-91-இல் 1,00,000 எண்களும் 1991-92-இல் 1,50,000 எண்களும், 1992-93-இல் 1,50,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

நடப்பு ஆண்டு (1993-94) ரூ.5.5 இலட்சம் மதிப்புள்ள 1,35,000 எண்கள் செடிகள் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் நவீனத் தொழில்நுட்ப முறைகள் மூலம் செடிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

தற்பொழுது உள்ள பண்ணையின் மூலம் இம்மாவட்டத் தேவையில் 60 சதவிகிதம் மட்டுமே பூர்த்தி செய்ய இயலும் என்கிற நிலையில் மேலும் அருகாமையில் 4.68.5 எக்டேர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு பண்ணை விரிவாக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் நன்கு வறட்சியினைத் தாங்கி வளரக்கூடிய இலந்தை, சீத்தா, சப்போட்டா முதலிய செடிகள் நடப்படுவதுடன் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

பழ மரங்களின் சாகுபடியில் அதிகப் பரப்பினைக் கொண்டு வரும் நோக்கோடு மா, சப்போட்டா, முந்திரி, எலுமிச்சை, கொய்யா முதலிய பழச்செடிகள் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படுகின் றன. குறைந்த பராமரிப்பு செலவில் விவசாயிகளுக்கு அதிகப் பலனைக் கொடுத்து ஒரு நிரந்தர வருமான ஆதாரமாக இருப்பதுடன், பழச்செடிகள் சாகுபடி சுற்றுச்சூழலையும் மேம்படுத்துகிறது.

1985-86-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் படும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 1,440 எக்டேர் பரப்புக்குப் பழச்செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டிற்கு 200 எக்டேர் பரப்பளவிற்குப் பழச் செடிகள் விநியோகம் செய்திடத் திட்டமிடப் பட்டுள்ளது.

**நா. தில்லைகோவிந்தன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்**





அலங்காநல்லூரில் உள்ள செயற்கை வைரம் பட்டை தீட்டும் வேலை.

# குறளின் குரல்



சாமி பழனியப்பன்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் குறட்பா வாழ்க்கைத் துணை என்னும் அதிகாரத்தில் உள்ளது.

"பிறதெய்வந் தொழாது, தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயில் எழுவாள், பெய் என்று சொல்ல மழை பெய்யும்'

இது - 'தெய்வந் தொழாஅள்' என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகர் கூறும் உரை. அன்று முதல் இன்று வரை குறட்பாவுக்கு உரை எழுதிய எல்லா உரையாசிரியர் களுமே மேலே குறித்துள்ள உரையை அடியொற்றியே எழுதி வந்திருக்கின்றனர். இக்குறட்பாவை பண்டைய இலக்கிய ஆசிரியர் பலர் உள்ளவாறே எழுத்தாண்டிருக் கின்றனர். குறட்பாவின் கருத்தைக் கையாண்டும் இருக்கின்றனர்.

கருமழை தரல் வேண்டின்
தருகிற்கும் பெருமையளே (கள-39:8)

என்று போற்றுகின்றது கற்றோர் ஏத்தும் கலித்தொகை.

"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுவாளை"

என்று பேசுகிறது நெஞ்சையள்ளும் செஞ்சொற்காப்பிய மான சிலப்பதிகாரம்.

"மண்டினி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகள்"
(மணி-சிறை செய் 45-46)

என்கிறது மணிமேகலை என்னும் அணி செய் காப்பியம். மேலும்,

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை'

என்ற வரிகளும் இடம் பெற்றுள்ளன. இதில், சாத்தனார், குறட்பாவை அப்படியே கையாண்டு, திருவள்ளுவரை, 'பொய் யில் புலவன்' 'பொய்யற்ற புலவன்' என்று சிறப்புற பாராட்டியும் உள்ளார். இன்னும், இது 'பொருள் பொதிந்த உரை' பொருளுரை என்றும் வியந்துள்ளார்.

அடுத்து,

'நாடு மூரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே'

என்கிறது வளையாபதி.

'தெய்வம் தொழாஅள்' என்ற இக்குறட்பாவைப் பற்றி வெளிவந்துள்ள கருத்துகள் பல; இக்குறட்பாவைக் கொண்டே ஆசிரியரைத் தாக்குவோரும் உளர். பன்னெடுநாள் என் நெஞ்சில் குடிகொண்ட பாக்கள் சிலவற்றுள் இஃதும் ஒன்று. பாடபேத மிருக்குமோ என்று ஐயுற்ற நாளும் உண்டு. பண்டையாசிரியர் சிலர் இக்குறளை உள்ளவாறே ஆண்டுள்ளமையால், பாடபேத ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்ற தெளிவும் ஏற் படுவதுண்டு' என்று குறிப்பிடப்பட்டுள்ளார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

இக்குறட்பாவிற்கு உரைகாணும் முயற்சியில் ஈடுபட்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் மேலும் கூறுகை யில்,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்'

என வருகின்ற திருக்குறளையும்,

"கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கிருந்தால்
நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு
அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்"

என்று வரும் மத்தேயு (18:20) கிறிஸ்துவின் வாக்கினை யும் எடுத்துக்காட்டி, காதலால் விழுங்கப்பட்டு இருமை யற்றவர் மன உறுதியில் சிறந்து நிற்பாராதலின் அவரால் என்ன செய்தல் கூடாது? அவர் 'பெய்' என்றால் மழை பெய்யும்; வா என்றால் மலை வரும்; அவர்தம் ஆணைக் குப் பூதங்களும் அடங்கும்; தெய்வமும் அடங்கும் என்று கூறுதல் மிகையாகாது; என்று பலபல சொல்லி உறுதிப் படுத்த முயற்சிக்கிறார்.

இவ்வாறாக,

இக்குறட்பாவிற்கு, உரை கண்டார் பலரும், உரையில் தத்தமது உள்ளத்தைக் கா[illegible]டினாரே தவிர, யாரும் வள்ளுவர் உள்ளம் [illegible]வெனத் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பாவிற்குப் பொருள் காண்பதில் எத்தகைய இடர்ப்பாடும் இருப்ப தாகத் தோன்றவில்லை. குறட்பாவின் அமைப்பை மாற் றாமல் அப்படியே குறளமைப்பை வைத்துக் கொண்டால், பொருள் காண்பது மிகமிக எளிது.

அதாவது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப் பிடுவது போல, இதனை உவமைத் தொகையாகக் கொண்டு பொருள் கூறுதல் மிகவும் பொருத்தமுடையது.

இன்றிருப்பதுபோல் வள்ளுவர் காலத்திலும் சிறு தெய்வ வணக்கம் வழக்கத்தில் இருந்தது. பின்னர் வந்த பாரதியார்கூட 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்' என்றார்.

'தெய்வங்களை வணங்காமல், தன் கணவனையே தெய்வமாக மதித்துப் போற்றித் துயில் எழும் துடியிடையாள், 'பெய்' என்ற அளவில் பெய்யும் மழை போன்று இனியவள்'

பெய் பென்ற அளவில் பெய்யும் மழை இவ் வையகத்து உயிர்களுக்கு இனியது. தெய்வங்களைத் தொழாமல் தன் கணவனையே தெய்வமாகப் போற்றித் தொழுது துயில் எழுகின்றவள், (அவள் கணவனுக்கு) அம்மழை போன்றவள்'.

'தெய்வங்களைத் தொழாமல், தன் கணவனையே தொழுது துயில் எழுகின்றவள், பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்' - இதுதான் இக்குறட்பாவின் பொருள்.

இக்குறட்பாவின் மூலம், தமிழகத்தில் பண்டைக் காலத்திலும் இந்த நாளிலும் இருந்த - இருந்து வருகிற சிறு தெய்வங்களின் வழிபாட்டை வள்ளுவர் மறுத்திருக்கிறார் என்றும் கொள்ளலாம்.

'வானமழை நீயெனக்கு'

என்று பாடுகிறார் பாரதியார். உடலினால் இருவரேனும் உள்ளத்தால் ஒன்றாக இணைந்த காதலனுக்கும் காதலிக்கும் உள்ள தொடர்பு - அவர் பெறுகின்ற இன்பம் முதலியவற்றைத் 'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பா தெளிவிற விளக்கும்.

இனி, வள்ளுவரின் தெய்வம் தொழாஅள் என்ற குறட்பாவிற்கு இப்படிப் பொருள் காண்பதற்கு வேறு ஆதாரம் ஏதேனும் உண்டா என்று கேட்பாரும் உண்டு.

''வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி *(1192)*

என இன்பத்துப் பாடலில் இடம் பெற்றுள்ள குறட்பாவினையே தகுந்த ஆதாரமாகக் காட்டலாம்.

''ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்றுபடுத்துவது காதல். காதலர்க்கு எல்லாவற்றையும்விட, அந்தக் காதல் மேம்பட்டதாகும். காதலியின் உள்ளத்தில் கடந்த பொருளாகக் காதலனும், காதலன் உள்ளத்தே கடந்த பொருளாகக் காதலியுமே இருப்பர். சுருங்கக் கூறினால், 'இருதலைப் புள்ளின் ஒருயிர்' போல்வர் அவர்கள்! 'புனற்கே புனல் கலந்தாற் போன்று' என்று நளவெண்பாவும்,

'வெள்ளத்தி னோடொரு வெள்ளமுமாய் - நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்'.

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் கூறுவது போல உள்ளம் கலந்த காதலர்களுக்குள் ஒருவர்க்கு ஒருவர் அளிக்கும் இன்பம், உலகத்தில் வாழும் உயிர்களுக்கு வானம் பெய்து பயன்தரல் போன்றது. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் என்ற குறட்பா வாயிலாக நாம் இவ்வுண்மையை அறிகிறோம். இக்குறட்பாவின் கருத்தை நன்றாக நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, 'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பாவிற்கு நாம் பொருள் காண முற்பட்டால், வள்ளுவர் 'பொய்யிற்புலவன்' என்றும் அவர் உரை 'பொருளுரை' என்றும் உணரலாம்.

திருக்குறள் 'வான் சிறப்பு' அதிகாரத்தில்,

'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று'

என்ற குறட்பாவில், வானின்று அமிழ்கின்ற (பெய்கின்ற) காரணத்தால் மழையை அமிழ்தாக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். 'அமிழ்து' என்பது ஆழ்ந்து பொருள்காண வேண்டிய ஒரு சொல்.

திருக்குறள் இன்பத்துப் பாலில், 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்தில் உள்ள

உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் *(கு.1106)*

என்னும் குறட்பாவில், தலைவியின் மெல்லிய இனிய தோள்களை அமிழ்தாக்கிக் காட்டுகிறது.

நான் என் காதலியின் மெல்லிய தோள்களைப் பொருந்தும் போதெல்லாம், எனது உயிர் தளிர்க்கும் படியாக - புத்துணர்வு துளிர்க்கும் படியாக என்னை அவள் தழுவுகிறாள். எனவே, அவளது தோள்கள் அமிழ்தத்தால் ஆக்கப்பெற்றிருக்க வேண்டும்! என்று தலைவன் பேசுகிறான். இக்குறட்பாவில் தலைவியின் தோள்களை அமிழ்தாக - மழையாக சிறப்பித்துக் கூறிய வள்ளுவர், 'தெய்வம் தொழாஅள்' எனும் குறட்பாவில், தலைவியையே மழையாக உருவகித்துக் காட்டினார் என்பதில் என்ன தவறு?

எனவே, 'தெய்வம் தொழாஅள்' என்னும் குறட்பாவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கண்ட உரையே சிறப்புடையது எனலாம்.

## எழுத்தாளருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

'இந்து' ஆங்கில நாளேட்டினைச் சேர்ந்த பழம்பெரும் பத்திரிகையாளரும், எழுத்தாளருமான திரு டி. ஆஞ்சநேயலுவின் 70-வது பிறந்த நாளையொட்டி, நாற்பத்தைந்து ஆண்டுக்காலமாக பத்திரிகையாளராகச் சமுதாயத்துக்கு அவர் ஆற்றியுள்ள பணியினைப் பாராட்டும் வண்ணம், கடந்த ஜனவரி, *1993*-இல் ஒரு விழா எடுக்கப்பட்டு அவ்விழாவில் ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டதென்றும், அச்சிறப்பு மலரை வெளியிடுவதற்கு ரூ.*30,000* செலவாகியதென்றும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியுதவி அளிக்க வேண்டுமெனக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.


அச்சிறப்பு மலரை வெளியிட்டபோது செலவான தொகையான ரூ.30,000-த்தை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'-யிலிருந்து அளிக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு, திரைப்படக் கல்லூரியில் இட ஒதுக்கீடு

தமிழகத் திரைப்படத்துறையில் திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நடிக நடிகையர் ஆகியோர்களுக்கிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடுகளையும், பிரச்சினை களையும் அனைத்துத் தரப்பினரும் ஏற்கும் வண்ணம், கடந்த 25.7.1993 அன்று நடந்த பேச்சு வார்த்தையில் சுமுகமாகத் தீர்த்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழகத் திரைப் படத் துறையில் ஈடுபட்டு வரும் அனைத்துப் பிரிவினருக்கும் நன்மை பயக்கும் வண்ணம் ஒரு சில நலத்திட்டங்களையும் அறிவித்திருந்தார்.

அவற்றில் ஒன்று, தமிழகத் திரைப்படத் துறை யில் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்குத் திரைப் படக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வது குறித்ததாகும். அதன்படி, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி நடத்தி வரும் திரைப்பட இயக்கம் (Film Direction) ஒளிப்பதிவு (Cinematography) ஒலிப் பதிவு (Sound Recording) படத்தொகுப்பு (Editing) படச்சுருள் தொகுப்பு (Film Processing) ஆகிய 5 டிப்ளோமா பயிற்சிப் பிரிவு ஒவ்வொன்றிலும் ஒரு இடம் வீதமும், மற்றும் நடிப்புப் பயிற்சிப் பிரிவில் மாணவர் பிரிவில் ஒரு இடமும், மாணவியர் பிரிவில் ஒரு இடமும், ஆக மொத்தம் ஏழு புதிய இடங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றை அனைத்துத் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தை களுக்கு ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ளார்.

மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின ருக்கு எவ்வாறு கட்டணச் சலுகைகள் வழங்கப் படுகின்றதோ, அதே விகிதத்தில் கட்டணச் சலு கைகள் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் என்ற சலுகை யையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இந்த இட ஒதுக்கீடு இந்தக் கல்வி ஆண்டான 1993-94-லிருந்து அமலுக்கு வருகின்றது.




குற்றப் பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் போராடி 3.4.1920-ல், சேடபட்டி ஒன்றியம் பெருங்காம நல்லூரில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 16 பேர் நினைவாக 19.9.92-ல் அமைக்கப்பட்ட நினைவுத்தூண்; இவ்விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு. இரா. முத்தையா, திரு. ஆண்டித்தேவர் எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொது இடங்களில் படப்பிடிப்பு

திரைப்படத் தயாரிப்பாளர்களின் மற்றொரு கோரிக்கை, பொது இடங்களில் படப்பிடிப்பு நடத்த அனுமதி பற்றியதாகும். அரசின் கட்டுப் பாட்டிலுள்ள கட்டடம், கல்வி நிலையம், கோயில்கள், விருந்தினர் மாளிகைகள் போன்ற பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்துவதற்கு, பல்வேறு துறைகளிடமிருந்து அனு மதி பெறும் முறையினை எளிதாக்க வேண்டும் என்று கோரிக்கையைப் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்தகைய அனைத்துப் பொது இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த ஒரே அதிகாரியிடமிருந்து ஒட்டுமொத்த அனுமதி பெறும்வண்ணம் Sinlge Window Clearance என்ற திட்டத்தை அமல் படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இத்தகைய அனைத் துப் பொது இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்குவார். பொது இடங்களில் திரைப் படப் படப்பிடிப்பு நடத்தும், தயாரிப்பாளர் களுக்கு நன்மை பயக்கும் இத்திட்டம் உடனடியாக அமலுக்கு வருகின்றது.

# சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு

2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா

10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்

600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
  1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) **1% ஊக்கத்தொகை**
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

**மேலும் 2%** ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685

சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

# இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# நீதித் துறையினருக்குத் தனிக் குடியிருப்புகள்

நீதித் துறைக்குத் தேவையான கட்டடங்கள் முதலான அடிப்படை வசதிகளை உருவாக்கித்தர உரிய நிதி ஒதுக்கீட்டினைத் திட்ட அமைப் பின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று, மத்திய திட்டக் குழுவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார். நீதித் துறையில் பணிபுரிபவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைத் தனியாக உருவாக்கித் தர வேண்டும் என்ற கருத்தினை அகில இந்திய அளவில் முதன்முதலாகத் திட்டக் குழுவின் கவனத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்தார்.

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் கருத்தினை ஏற்றுக் கொண்ட திட்டக் குழு, நீதித்துறை அடிப்படை வசதிகள் முன்னேற்றத்தை முதன் முதலாக ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது. இதனை அடுத்து, 1993-94-ஆம் ஆண்டில் 3.70 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நீதித்துறையின் அடிப் படை வசதிகளை முன்னேற்றும் பொருட்டு நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் ஆகியவை கீழ்க்கண்ட இடங்களில் கட்டித் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித் துள்ளார்.

1. சென்னை மாநகர உரிமை யியல் நீதிமன்றக் கட்டடத்தில் மூன் றாவது மாடியினை ரூ.150 இலட்சம் செலவில் கட்டுதல்;

2. தருமபுரி மாவட்டம் ஒசூரில், மாவட்ட முனிசிப் நீதிமன்றக் கட்டடம், நீதிமன்ற நடுவர் கட்டடம் ஆகியவற்றை ரூ.70 இலட்சம் செலவில் கட்டுதல்;

3. திண்டுக்கல், செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில், மாவட்ட நீதிபதிகளுக்குக் குடி யிருப்புகள் ரூ.67 இலட்சம் செலவில் கட்டுதல்;

4. திருவள்ளூர், அரியலூர், விழுப்புரம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் சார்-நீதிபதி களுக்கான குடியிருப்புகள் ரூ.20 இலட்சம் செலவில் கட்டுதல்;

5. தேர்ந்தெடுக்கப்பட்ட 15 இடங்களில் சார்நிலை நீதிமன்ற நடுவர்களுக்குக் குடியிருப்புகளை ரூ.60 இலட்சம் செலவில் கட்டுதல்;

ஆகிய பணிகள் 1993-94-ஆம் நிதியாண்டில் ரூ.3.70 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, அவை துரிதமாகச் செயல்படுத்தப் பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

---

## சாலை விபத்தில் இறந்தவரின் துணைவியாருக்கு வேலைவாய்ப்பு முதல்வர் ஆணை

திருமதி சோபனாதுரை என்பவர், தனது கணவர் திரு. துரை, இந்தியக் கப்பற்படையில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, விசாகப்பட்டினத்தில் நடந்த சாலை விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனவும், 29 வயதான அவர், தன்னுடைய 3 வயது குழந்தையோடு மிகவும் சிரமமான நிலையில் வாழ்ந்து வருவதாகவும், தனக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கருணை மனு அனுப்பியிருந்தார். அதில், அவர் பி.லிட்., எம்.பில்., மற்றும் பி.எச்.டி., (தமிழ்) போன்ற பட்டங்களைத் தாம் பெற்றிருப்ப தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி. சோபனாதுரையின் மனுவினைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருமதி சோபனா துரைக்கு, அவரது கல்வித் தகுதிக்கு ஏற்ப, தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறையில் புதி தாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 'தமிழாய்வு அலுவலர்' என்ற பணி யினை வழங்கி ஆணை பிறப் பித்தார்.



# காவல் பணியில் கம்ப்யூட்டர்

தமிழகக் காவல் துறையில் பணி புரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் காவல் பணியில் கம்ப்யூட்டர் உபயோகம் குறித்துப் பயிற்சி அளிப்பதற்கு என்று, ''காவல் துறை கம்ப்யூட்டர் பயிற்சி மையம்'' மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையுடன் துவக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பயிற்சி மையத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் நிலையிலிருந்து, அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

15.12.1993 அன்று முற்பகல் 11.00 மணி முதல் 12.30 வரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 'காவல் துறை கம்ப்யூட்டர் மையத்திற்கு'ச் சென்று அங்கு அளிக்கப்படும் பயிற்சியைக் கவனித்தார். மேலும், ஒரு காவல் நிலையத்தில் அனைத்துப் பணிகளையும், கம்ப்யூட்டர் உதவியுடன் எவ்வாறு சிறப்புடன் செயலாற்ற முடியும் என்பதைக் கூறிய போது, அது குறித்து விளக்கமாகக் கேட்டறிந்தார்.

குறிப்பாகக் காவல் நிலையத்தில், மனுதாரர்களிடமிருந்து முதல் தகவல் அறிக்கை (First Information Report) பெறுவது, மனுதாரர்களிடமிருந்து வாக்குமூலங்கள் சேகரிப்பது, குற்றப்பத்திரிகை (Charge Sheet) தயாரிப்பது போன்ற முக்கியப் பணிகளை எவ்வாறு செயலாக்க முடியும் என்பதும், பெரிய வரிசைகளில் போக்குவரத்து தடையின்றி இயக்குவது குறித்தும் அப்போது விளக்கிக் கூறப்பட்டது.

உயர் அதிகாரிகள் மட்டுமன்றி, காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலையில் இருக்கின்ற அனைவரும் எளிதில் இயக்கக் கூடியதாகவும், புரிந்துகொள்ளக் கூடியதாகவும், இந்த கம்ப்யூட்டர் பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது என்று காவல் துறை கம்ப்யூட்டர் ஆலோசகர் திரு என். கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியின் உபயோகத்தைப் பற்றி எடுத்துரைக்கும் போது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் காவல் துறையை, நவீனப்படுத்துவது மட்டுமன்றி, மனித நேயமிக்க ஒரு துறையாக, இதனை மாற்றுவதைத் தனது தலையாய கடமையாக மேற்கொண்டுள்ளதாக எடுத்துரைத்தார். காவல் துறையின் அனைத்து மட்டங்களிலும் கம்ப்யூட்டர் உபயோகத்தைக் கொண்டுவரச் செய்து அதன்மூலம் காவல் துறையை, நவீனப்படுத்துவதோடு, காவல் துறையைச் சேர்ந்த அனைத்து நிலையில் உள்ள அலுவலர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு காவல் துறை மற்ற மாநிலங்களுக்கு இத்துறைகளில் முன்னோடியாக விளங்குகிறது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழக அரசின் ஒவ்வொரு துறையும், பொது மக்களுக்கு நன்முறையில் சேவை செய்யவேண்டும் என்பதோடு, அரசுப் பணியாளர்கள் அனைவரும், நன்முறையில் பணியாற்றத் தயார்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவ்வாறு அரசு ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் அளிக்கும் திட்டத்தின் கீழ், இந்த மையம் செயல்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

வளர்ந்துவரும் தமிழகத்தின் பல வேறு பிரச்சினைகளைச் சமாளிக்க காவல் துறையை நவீனப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து 80 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, இதுவரை 10 கோடி ரூபாய் தான் மத்திய அரசு கொடுத்துள்ளது என்றும், அதற்கு மேலும் தமிழக அரசே கூடுதலாக 10 கோடி ரூபாயை வழங்கி நவீனப்படுத்தும் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறைதான் மிகச் சிறந்த முறையில் பணியாற்றும் காவல் துறை என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை என்பதையும் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டார்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் வைக்கப்பட்டு பார்வையாளர் புத்தகத்தில் தனது கருத்துக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பதிவு செய்தார்.

நிகழ்ச்சியில் உள்துறை செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., டி.ஜி.பி. திரு எஸ். ஸ்ரீபால், சென்னை நகர கமிஷனர் திரு ஆர். ராஜகோபாலன் மற்றும் ஐ.ஜி., டி.ஐ.ஜி நிலையில் உள்ள பல அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.



The objective of this Government from the day it took over the administration, is to modernise and humanise the limbs of Government. In this process, several new instruments have been created to achieve the overall objective. The Special Security Group, the Uniformed Services Recruitment Board, and the Computer School are all such instruments created within the Police Department, apart from many other such tools created elsewhere.

I feel extremely happy to visit this Police Computer Training School headed by Thiru T.V. Krishnaswami, the Consultant appointed by this Government. He has delineated in great detail the ambitious plans on the anvil. I will be the happiest person when these schemes are finally implemented, for these schemes are aimed at improving the quality of service rendered by the Police Force to the public.

I wish the School the very best and express the hope that the trainees who go through this School will go out as better equipped Police Officers.

J. Jayalalitha
15/12/1993

Chief Minister.



# அரசு ஊழியர்களுக்கு ரூ100 இடைக்கால நிவாரணம்!

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

★ தொழில் வரியில் சலுகை.
★ மருத்துவப்படி உயர்வு குறித்து பட்ஜெட்டில் அறிவிப்பு
★ இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் செல்ல விடுப்புக் காலப் பயணச் சலுகை.

அரசு அலுவலர்களின் பல்வேறு சங்கங்கள் டிசம்பர் 15-ஆம் தேதி முதல் அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்வதாக முடிவு செய்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளைத் தீவிரப் பரிசீலனை செய்து தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் அவர்களுடன் கலந்தாலோசித்து, பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின்படி , தலைமைச் செயலாளர் அவர்களும் நிதித்துறைச் செயலாளர் அவர்களும் பல்வேறு சங்கங்களையும் அழைத்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பல்வேறு கட்டங்களில் பேசினார்கள்.

6.12.93 அன்று அனைத்துச் சங்கங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தால்தான் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்காக அனுமதி கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிடும் பணி இருந்தும்கூட, அரசு அலுவலர்கள் சங்கங்கள் அனைத்தையும் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடம் நடந்தது.



இந்தப் பேச்சுவார்த்தையின் போது கீழ்க்கண்ட சங்கங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டன.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநிலத் தலைவர் திரு சிவ. இளங்கோ மற்றும் பொதுச் செயலாளர் திரு. சு. அறிவுக்கரசு.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. கங்காதரன் மற்றும் மாநிலப் பொருளாளர் திரு. என்.எல். ஸ்ரீதரன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. பாலசுப்பிரமணியம் மற்றும் பொதுச் செயலாளர் திரு பி.எஸ். சவுந்திரபாண்டியன்.

தமிழ்நாடு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை ஊழியர் சங்க மாநிலத்தலைவர் திரு. எம். மாணிக்கம் மற்றும் பொதுச் செயலாளர் திரு. கே. தங்கராஜ்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் திரு. வா. பாலகிருஷ்ணன் மற்றும் மாநில பொருளாளர் திரு. க. முருகேசன்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழக (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் திரு எ.கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர்கள் திருவாளர்கள் தா. ஜேசுதாஸ் மற்றும் என். முத்து ராமலிங்கம், பிரச்சாரச் செயலாளர் திரு. கே.எஸ். சந்திரசேகரன், பொருளாளர் திரு என். முருகன்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் திரு கே.ஜி. மோகன், பொதுச் செயலாளர்கள் திரு. மு. முத்துசீனிவாசன் மற்றும் திரு. என். சங்கரன் மற்றும் மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திர சேகரன்.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் கீழ்க்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது 1.1.94-முதல் இடைக்கால நிவாரண மாக ஊதிய விகிதங்களில் உள்ள அரசு அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-ம், மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு மேல் தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.40-ம் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு கீழ் தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25-ம் வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்குக் கூடுதல் நிதிச் சுமை ரூ.120 கோடியாகும். 1.1.94 என்ற தேதி இடைக்கால நிவாரணத்திற்கு மட்டும்தான் பொருந்தும்.

தமிழக அரசு ஏற்கெனவே 1.6.88- முதல் 13 சதவிகித அகவிலைப்படியைக் கணக்கில் கொண்டு அரசு அலுவலர் களுக்கு ஒய்வூதியப் பலன்களை வழங்கி வருகின்றது. மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு அண்மையில் வழங்கியது போல இவ்வரசும் 1.1.94-முதல் பணியிலிருந்து ஒய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கு 20 சதவிகித அகவிலைப்படியை (ஏற்கெனவே வழங்கிய 13 சதவிகித அகவிலைப்படியை உள்ளடக்கி) சேர்த்து பணிக்காலக் கொடை மட்டும் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

அரசு அலுவலர் சங்கங்கள் தொடர்ந்து தொழில் வரியை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருவதால் அரசு அலுவலர்களின் நலனைக் கருதி ரூ.5,000 வரை சில பிரிவினர்களுக்கு தொழில் வரியைச் சற்று குறைத்து வசூலிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தற்போதுள்ள மாத மருத்துவப் படியான ரூ.15-ஐ ஒரளவிற்கு உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்து தக்க முடிவினை வரும் நிதிநிலை அறிக்கையில் வெளியிடும்.

தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியப் பணியாளர்களுக்கு இனிவரும் காலத்தில் கால ஊதியம் பெறுகின்ற அரசு அலுவலர்களுக்கு அக

விலைப்படி வழங்கும்போது தகுந்த முறையில் அகவிலைப்படி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

தற்போதுள்ள விடுப்புக் கால பயணச் சலுகையை விரிவுபடுத்தி மாநிலத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்குப் பதிலாக அவர்களின் விருப்பப்படி இந்தியாவின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் 400 கி.மீ. என்று பயண தூரத்தைக் கட்டுப்படுத்தி வழங்கப்படும்.

பதிவறை எழுத்தர்களுக்குப் பதவி உயர்வில் உள்ள தேக்கநிலையைக் கருத்தில் கொண்டு 1000 பதிவறை எழுத்தர் பணியிடங்கள் இளநிலை பதிவறை எழுத்தர் நிலைக்கு மேம்படுத்தப்படும்.

தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய விகிதங்களிலும் வீட்டு வாடகைப்படியிலும் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது.

உள்ளாட்சி நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்களின் பிரச்சினை பற்றி அலுவலர் மட்டத்தில் தனியாக விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முடிவிற்கு அனைத்துச் சங்கங்களும் ஆதரவு தெரிவித்ததுடன், 15.12.1993 முதல் மேற்கொள்ள இருந்த அவர்களுடைய வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் அறிவித்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் சென்று பார்வையிடும் பணி இன்று இருந்தும் கூட, பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய் கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைத்ததற்கு அவர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். மேலும் தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் உள்ள தமிழக அரசுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பை அளிப்பதாக உறுதி அளித்தார்கள். இந்தச் சந்திப்பின்போது தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன் அவர்களும், நிதித்துறைச் செயலாளர் திரு என். நாராயணன் அவர்களும் உடனிருந்தார்கள்.

இயல் இசை நாடக மன்றம் நடத்தும்

## சலங்கை விழா!

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பரதக்கலையைப் பன்னாட்ட வரும் அறிந்து பாராட்டி, அக்கலையை வளர்ப்பதற்குத் திறமையான வளரும் இளம் பரதக் கலைஞர்களையும், பரதக் கலை வல்லுநர்களையும் கொண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக ஒரு சிறந்த விழா ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்து இருந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்திற்கிணங்க சென்ற ஆண்டு, 'சலங்கை விழா' என்ற பரத நாட்டியக் கலை விழா 5 நாட்கள் சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த ஆண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம், கொண்டாடப்படும் இந்தச் 'சலங்கை விழா' எனும் பரத நாட்டியக் கலை விழாவை அனைவரும் பார்த்து மகிழ வேண்டும் என்பதற்காகவும், கிராம மக்களும் இந்தக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ வேண்டும் என்பதற்காகவும், இந்தக் கலை விழாவைச் சென்னையைத் தவிர்த்த மற்ற இடங்களில் நடத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின் படி, இந்த ஆண்டு, 1993 டிசம்பர் 19-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் 'சலங்கை விழா' சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்துடனும் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஒத்துழைப்புடனும் நடத்தப்படும்.

19.12.1993 — சிதம்பரம் — கலைமாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்களின் 'வாதினி நாட்டியாலயா' வழங்கும் பரத நாட்டியம்.

20.12.1993 — புதுக்கோட்டை — திருமதி ரேவதி முத்துசாமி அவர்களின் 'ஸ்ரீரங்கம் பரதநாட்டியாலயா' வழங்கும் 'பூம்புகார் கலைச் செல்வி' நாட்டிய நாடகம்.

21.12.1993 — காரைக்குடி — திருமதி சந்திரா தண்டாயுதபாணி அவர்களின் 'நாட்டிய கலாலயம்' வழங்கும் 'பாஞ்சாலி சபதம்' 'பாரதியாரின் பாரத தேசம்' நாட்டிய நாடகம் மற்றும் பொம்மை நடனம்.

22.12.1993 — ராஜபாளையம் — செல்வி நிதுசிந்தூரி அவர்களின் 'ஸ்ரீசக்தி சாரதா கலாநிகேதன்' வழங்கும் பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடி நடனம்.

23.12.1993 — இராமேஸ்வரம் — கலைமாமணி திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களின் 'அபிநய நாட்டியாலயா' வழங்கும் 'ஆடும் சிவனும் - அருள்தரும் ராமனும்' நாட்டிய நாடகம்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களும், உறுப்பினர்- செயலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களும் செய்வதோடு விழாவிலும் கலந்துகொள்வார்கள்.





# பெரியார் மாவட்டத்தில் வெள்ளம்

பெரியார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையை அறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உடனடியாக, வெள்ளச்சேதம் ஏற்பட்ட பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் வெள்ளச் சேதம் ஏற்பட்ட தாராபுரம், வெள்ளக்கோயில் பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களுக்கு ஆறுதல் கூறு அனுப்பி வைக்கப்பட்டார். அவர்கள் அங்கு ஏற்கெனவே நேரடியாகப் பணியாற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்களுடனும், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்களுடனும் சேர்ந்து அப்பகுதியில் உள்ள அமராவதி, உப்பாறு கரையோரக் கிராமங்களைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் காங்கயம், சென்னிமலைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீருந்து நிலையங்களை பார்வையிட்டு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுப் பள்ளிகளில் தங்க வைத்திருக்கும் குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறினார்.

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு அமைச்சர்கள் உதவிகளை வழங்கினார்கள்.

பவானிசாகர் அணை 120 அடி கொள்ளளவுக்கு மேல் பெருகி வெள்ளச் சேதம் ஏற்படும் நிலைமை உள்ளதால், பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களான ஆண்டிகுளம் ஓரிச்சேரி, ஆப்பக்கூடல், கீழ்வாணி, மூங்கில்பட்டி, சவுண்டப்பூர், பெரிய கொடிவேரி, மேவாணி, அம்மாபாளையம், பெருந்தலையூர்,





கூகலூர், பெருமுகை, தொட்டம் பாளையம், இக்கரை தத்தப்பள்ளி, அக்கரை தத்தப்பள்ளி, அக்கரை நெகமம், பி.பி.அக்ரஹாரம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் முன்னேற்பாடாகப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, சேதங்களிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். வெள்ளப்பகுதிகளில் அதிகாரிகள் ரோந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் ஆணையிட்டார்.

திடீரென்று கனமழை பெய்ததினாலும், அமராவதி அணையிலிருந்து சுமார் ஒரு இலட்சம் கன அடி திறந்து விட்டதன் காரணமாகவும், அமராவதி ஆறு நிரம்பி தாராபுரம், வெள்ளக்கோயில், மூலனூர் பகுதிகளில் சில சேதங்களை ஏற்படுத்தியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்கள் வெள்ள நிவாரணப் பகுதிகளை நேரடியாகவே சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகளைக் கவனித்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடனடியாக ரூ.6,81,000 நிவாரண உதவியாக 1771 குடும்பங்களுக்கு வழங்கினார். இது தவிர வேட்டி, சேலை, அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாற்று இடத்தை ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ்.பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் உடனடி உத்தரவிட்டார். இதனால் முலையாம்பூண்டி, ஒரத்துப்பாளையம், நஞ்சைத்தலையூர், தூரம்பாடி, ஆகிய இடங்களில் குடியமர்த்தும் பணி விரைவாக நடைபெற்றது.

பழனி அருகில் அமராவதி ஆற்றின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 800 உணவுப் பொட்டலங்களும், 400 லிட்டார் மண்ணெண்ணெய்யும், வழங்கக் கோரி திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டதால், பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தாராபுரம் பகுதி வெள்ள நிவாரணக் குழுவிற்கு ஆணையிட்டு உடனடியாக அவை வழங்கப்பட்டன.

**— ஜி.டி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி உதவி

தமிழ்நாடு முழுவதும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த மழையாலும், புயலாலும் பல்லாயிரக்கணக்கான குடிசைகள் பாழ் அடைந்துள்ளன.

முழுமையாகப் பாழடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 500-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணை, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை கொடுக்கப்படும்.

பகுதியாகப் பாழடைந்த குடிசைகளுக்கு ரூ.250-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணை, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை கொடுக்கப்படும். இதனை விரிவுபடுத்த எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களை புதுடெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார் (11.12.1993).

# படமும்



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்னை சாந்தோமில் உள்ள காவல் துறை கம்ப்யூட்டர் தகவல் தொடர்பு மையத்தை 15.12.1993 அன்று பார்வையிட்டார். அப்போது காவல் துறை உயர் அலுவலர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

# செய்தியும்



கவீடன் நாட்டுத் திரைப்பட விழாவை சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் 14.12.1993 அன்று தொடங்கி வைத்தார். செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., F.F.S.I. துணைத் தலைவர் திரு சந்திர நாயர் மற்றும் கவீடன் நாட்டுத் துணைத் தூதர் திருமதி ஸ்டினா வாக ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும்

# சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில்

# விரைவான நீதி கிடைக்க வேண்டும்!

## மாலிமாத் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

**புதுடில்லியில் 4.12.93 அன்று மாலிமாத் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் மாநாட்டில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் படிக்கப் பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை:**



**மாண்புமிகு** இந்தியப் பிரதமரும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும், மாண்புமிகு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளும் மற்றும் புகழ்பெற்ற பேராளர்களும் கலந்து கொள்ளும் பெருமைமிக்க இக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுவதில் பெருமகிழ்வடை கிறேன்; பெருமிதம் கொள்கிறேன். இந்த வாய்ப்பு மறக்கமுடியாதது. பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கான தகுந்ததொரு சூழலை இன்று இங்குக் கூடியிருக்கும் பேரறிவாளர்கள் உருவாக்குவார்கள் என்று நம்புகிறேன்.

நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும், சமூக, பொருளாதார, அரசியல் துறை களில் விரைவான நீதி கிடைக்கவேண்டும் என்பதுதான் நம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் தலையாய குறிக்கோளாகும். பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்துகிடப்பதால், குடிமக்களுக்கு நீதி கிடைப்பதில் தகாத தாமதம் ஏற்படு கிறது. இத்தகைய தாமதம், குடிமக்களுக்கு நீதியை மறுப்பதாகவே ஆகிவிடுகிறது. எனவே பல்வேறு நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு விரை வாகத் தீர்வு காண வேண்டியது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. இந்தக் குறிக்கோளை எய்திட விரைவாக நீதி வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதத்திற்குக் காரணமாக உள்ள சட்ட விதிகள் - பிரிவுகள், நடைமுறைகள் ஆகியவற்றில் தேவைப்படுகின்ற மாற்றங்களை நாம் செய்தாக வேண்டியது மிகவும் இன்றி யமையாததாக உள்ளது. நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதைக் குறைப்பதற்கான வழிவகைகளை எடுத் துக்கூற, மாண்புமிகு நீதிபதி மாலிமாத் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது இப்பிரச்சினையின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து நீதித்துறைச் சீர் திருத்தங்களுக்கு மதிப்பு வாய்ந்த பல பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது.

நீதித்துறையும் திட்டங்களின் வரம்புக் குள் கொண்டு வந்து, அதற்காக, 1993-94-ஆம் ஆண்டுக்கான நிதிகளை, (அவை போதுமானதாக இல்லாவிட்டால் கூட) ஒதுக்கி, நீதித்துறையின் வரலாற்றி லேயே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியிருக்கும் மத்திய அரசுக்கு எனது பாராட்டுதலையும் நன்றியறிதலை யும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் குறிப்புக்கிணங்க தமிழ்நாடு அரசு 1994-'95, 1995-'96 ஆண்டுகளில் நீதித்துறை திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 83 கோடி ரூபாய் தொகையைக் கேட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களைப் பரிவுடன் பரிசீலித்துக் கணிசமான நிதியை மத்திய அரசு வழங்கு மென்று நான் நம்புகிறேன். இதன் மூலமாக நீதித்துறைக்கு ஒரு புதுப் பொலிவு ஏற்படும். அடிப்படை வசதி களைச் சிறந்த முறையில் வழங்குவதில் ஒரு புதிய தொடக்கம் உண்டாகும்.

குழு பரிந்துரைத்துள்ள நீதித் துறைச் சீர்திருத்தங்களைத் தமிழ்நாடு அரசு பொதுவாக, ஏற்றுக்கொள்கிறது. குறிப் பாக, நீதிபதிகளை நியமிப்பதில் பின் பற்றப்பட வேண்டிய வழிமுறைகளையும், நீதிபதிகளின் எண்ணிக்கை குறித்த ஆய்வை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும் என்பதையும், நீதிமன்றங் களின் பழைய செயல்பரப்பை நீக்க வேண்டும் என்பதையும், மேல்முறையீட் டுப் பெருக்கத்தைத் தவிர்க்கவேண்டும் என்பதையும், தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்கிறது.

உயர்நீதிமன்றங்களில் நீதிப்பேராணை மனுக்களும் மேல் முறையீடுகளும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தேங்கிக் கிடக்கின்றன. இந்தத் தேக்கத்தைக் குறைப்பதற்கு நான் ஒரு யோசனை கூற விழைகிறேன். தேக்கத்தைக் குறைப்பதற் கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத் தின் 226-ஆவது பிரிவின் கீழ் விரைவில் பரிகாரம் பெற விரும்பும் குடிமக்களுக்கு விரைவான நிவாரணம் கிடைப்பதற் காகவும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 323-அ, 323-பி ஆகிய இரண்டு பிரிவு களின் கீழ் ஒரு மாற்றுத் தீர்ப்பு அரங்கு

அல்லது நடுவர் மன்றத்தை நிறுவிடலாம் என்பதே என் யோசனை.

நீதிப்பேராணை மனுக்கள், நீதிப்பேராணை மேல் முறையீடுகள் உள்ளடங்கலாக, வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புரைப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி, தீர்ப்புகளை விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது. எந்த நீதிமன்றத்திலும் சரி, எந்த ஒரு வழக்கும் ஓராண்டுக் காலத்திற்கு மேல் நிலுவையில் இருக்கக்கூடாது என்பதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

உயர் நீதிமன்றங்கள் உட்பட எல்லா நீதிமன்றங்களிலும் காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். உயர்நீதி மன்றங்களில் நீதிபதி பதவிகள் இதுவரை நிரப்பப்படாமைக்குக் காரணங்கள் என்னவாக இருந்தாலும் அத்தகைய இடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பல்லாண்டுகளாக இவ்வாறு குவிந்து கிடக்கும் தற்போதைய நிலைமை திறனோடு மாற்றி அமைக்கப்படாவிட்டால் இன்றுள்ள நீதித்துறை அமைப்பிலேயே மக்களுக்கு நம்பிக்கை போய்விடும்.

ஒரு மக்கள் நல அரசின் தலையாய குறிக்கோள் பொதுமக்களின் நலனைப் பேணுவதே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமூக, பொருளாதார, அரசியல் நீதியை இலட்சியமாகக் கொள்ளும் ஒரு சமூக அமைப்பை எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக ஏற்படுத்தவேண்டும். சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய மூன்றும் ஆட்சியின் முப்பெரும் உறுப்புகளாகும். இந்த மூன்று உறுப்புகளும் ஒன்றையொன்று நன்கு புரிந்துகொண்டு ஒன்றையொன்று மதிதத்துச் செயல்படவே ண்டும்.சமூகத்தில், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த பிரிவினர்க்காகச் சட்டமன்றமோ, ஆட்சி நிர்வாகமோ சில முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சுயநலச் சக்திகள் நீதிமன்றங்களை அணுகி நிறுத்திவைப்பு ஆணைகளை (தடைகளை) அல்லது உறுத்துகட்டளைகளைப் (Injunctions) பெறுவதன் மூலம் மட்டுமே அந்த முற்போக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைத்து விடுமானால், அந்த முற்போக்கு நடவடிக்கையின் பயன்கள் ஏழை எளியவரைச் சென்றடைய முடியாது. இது மக்களிடம் அதிருப்தியை உருவாக்கும். இதன் விளைவாக நீண்ட கால சமூக அரசியல் பாதிப்புகள் ஏற்படும். நீதிமன்றம் முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்பது குறித்து நீதிபதி எம்.சி. சாக்ளா அவர்கள் பின்வருமாறு கூறினார்:-

‘‘இன்றைக்கு நீதிபதிகள் அரசாங்கத்தின் சமூக பொருளாதாரக் கொள்கைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் சட்டங்களை நோக்கவேண்டும். மக்களின் சமூக பொருளாதாரத் தேவைகளையும், அந்தத் தேவைகளை நிறைவு செய்யச் சட்டமன்றங்கள் விரும்புவதைப் பற்றியும், புறக்கணித்துவிட்டு நீதிபதி தன் ஆசனத்தில் இறுக்கமாக அமர்ந்து கொண்டால் போதுமானது என்று கூறுவது அபத்தமானதாகும். இப்படி, பற்றற்ற நிலையில் இருப்பதுதான் நீதியின் தரம் என்று கூறப்படலாம். ஆனால், அப்படிப்பட்ட நீதியின் தரத்தை யாரும் எய்த முடியாது. மேலும் அத்தகைய நீதியின் தரம் முற்றிலும் விரும்பத்தக்கதன்று என்பதே என் கருத்தாகும்.

காலத்தின் தேவைகளை நிறைவு செய்ய ஒரு சட்டமன்றம் விரும்பினால், அதற்கு ஒரு நீதிபதி துணை செய்ய வேண்டுமென்பதுதான் எனது கருத்து. சமூக முன்னேற்றத்திற்குத் தடைபோடும் சக்தியாக நீதிபதி இருக்கக் கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமர்ந்து, சட்டமன்றங்களில் இயற்றிய சட்டங்களைச் செல்லுபடியாகாமல் தடுக்கும் அதிகாரம் கொண்ட மூன்றாவது அமைப்பாக இந்தியாவில் நீதித்துறை விளங்குகிறது என்று ஏற்கெனவே ஒரு விமர்சனம் எழுந்துள்ளது. அந்த விமரிசனத்தை நீதிபதிகள் மெய்ப்பித்து விடக் கூடாது. குடிமகனுடைய தனிநபர் சுதந்திரத்தை நியாயமில்லாத முறையில் நிர்வாகம் ஆக்கிரமித்தால் அதை நீதிபதி தடுக்கவேண்டும். அதே நேரத்தில் சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அதில் மற்ற குடிமக்களைப் போலவே தானும் ஒரு குடிமகன் என்கிற முறையில் தனக்கும் அக்கறை இருக்கிறது என்பதையும்





சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் டைரக்டர் ஜெனரல் திரு மைக்கேல் ஹான்சன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்த அமைப்பின் ஜெனிவா நாட்டு இயக்குநர் திரு அலி டாக் அப்போது உடனிருந்தார் (9.12.1993).

நீதிபதி மறத்தல் கூடாது. ஒரு நீதிபதி என்பவர் சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கிவிட்டால் மட்டும் போதாது; தம்மால் இயலுமாயின் தம் மனச்சாட்சிக்குப் பங்கமில்லாத வகையில் பொருளாதார மற்றும் சமூகக் கண்ணோட்டத்திலும் ஒரு நீதிபதி தீர்ப்பை வழங்க முயல வேண்டும்''.

—இவ்வாறு நீதிபதி சாக்ளா கூறியுள்ளார்.

மிகமிக அசாதாரணமான சந்தர்ப்பங்களிலும், மற்றும் தடையாணைகள் அல்லது உறுத்துக்கட்டளைகள் (Injunctions) வழங்கப்படாவிட்டால் அதனால் தகாத இன்னல்கள் விளையக்கூடும் என்கின்ற சந்தர்ப்பங்களிலும் மட்டுமே ஒருதரப்பு சார்பாக தடை (நிறுத்திவைப்பு) ஆணை அல்லது உறுத்துக்கட்டளை வழங்கப்படலாம் என்று நான் உங்கள் அனைவரையும் உளப்பூர்வமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய இடைக்காலத் தடையாணை அல்லது உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படும்போது தாமதமில்லாமல் இருதரப்பு வாதங்களும் கேட்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். மற்றும் அந்த இடைக்காலத் தடைகள் நீக்கப்பெறவோ, உறுதி செய்யப் பெறவோ வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால் மக்களுக்குச் சமூக, அரசியல், பொருளாதார நீதியை வழங்குவதற்காக நிறுவப்பட்ட நீதித்துறையானது, மக்களுக்கு நன்மை செய்யக்கருதிக் கொண்டுவரப்படும் முக்கியமான முற்போக்குத் திட்டங்களை நிறுத்துவதன் மூலம் ஒரு தரப்புச் சார்பான இடைக்கால ஆணைகளைக் குறிப்பிட்ட ஒரு சிலரின் தனிநலனுக்காகப் பெறுவதற்குப் பயன்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆக நீதித்துறைக்கு உள்ள சுதந்திரத்தன்மைக்கு உரிய மதிப்பளிக்கின்ற அதே வேளையில் இந்த அரங்கத்தின் வாயிலாக நான் விடுத்திட விரும்பும் வேண்டுகோள் என்னவென்றால், தடையாணைகளை அல்லது உறுத்துக் கட்டளைகளை வழங்கும்போது சட்டமன்றத்தால் அல்லது நிர்வாகத் துறையால் மக்கள் நலன் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளின் நோக்கங்களை நீதிமன்றங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்குகளை எண்ணற்ற முறை தள்ளிவைத்தல் மற்றும் இடைக்காலத் தடையாணைகள் மற்றும் உறுத்துக் கட்டளைகள் ஆகியவற்றை நீதிமன்றங்கள் சாதக பாதகங்களைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு வாலாயமான முறையில் வெகு இயல்பாக வழங்கி வந்தால் அதன் காரணமாக நீதிவழங்கலில் தாமதம் ஏற்பட நேருகின்றது என்பது மட்டுமல்ல; வழக்குத் தொடுத்த மக்களுக்கு விவரிக்க முடியாத தகாத இன்னல்களும் அதனால் ஏற்பட்டுவிடுகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாகும். அதே போலக் குற்றங்களின் தன்மையைக் கருத்தில் கொள்ளாமலும், அவற்றால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை எண்ணிப் பார்க்காமலும், பிணையத்தின் (ஜாமின்) பேரில் விட அனுமதிப்பதும் அப்படிப்பட்ட வகையைச் சார்ந்ததேயாகும்.

சமூக, பொருளாதார அரசியல் துறைகளில் பொது மக்களுக்கு நீதி வழங்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது. மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகத்தான் அரசியல் கொள்கைகள் திகழவேண்டுமென்பதை நான் சொல்ல வேண்டிய அவயசிமில்லை. இந்த அடிப்படையில்தான் பெரும்பான்மை மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகக் கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலுள்ள வேலை வாய்ப்புகளிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு வகுத்திருக்கிறது என்பதை இங்கு சொல்வதே பொருத்தமாகும் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் 75 சதவிகித மக்கள் பின்தங்கியவர்கள், பிற்பட்டவர்கள். ஆகவே, இட ஒதுக்கீடு என்பது மக்கள் தொகையில் அவர்களது எண்ணிக்கைக்கேற்ப அமைவது தேவையாக உள்ளது. வேறு சில மாநிலங்களில் மொத்த மக்கள் தொகையில் பிற்பட்டோருடைய சதவிகிதம் குறைவானதாக இருக்கக்கூடும். எனவே, அத்தகைய மாநிலங்களோடு தமிழ்நாட்டின் நிலையை

ஒப்புநோக்கிப் பார்க்கமுடியாது. எனவே, சமூகத்தில் பெரும்பான்மை மக்களாக இருக்கும் பிற்பட்ட மக்களுக்கு, சமூகநீதி என்கின்ற குறிக்கோளை எய்துவதற்கான ஓர் இன்றியமையாத பயனுள்ள கருவி என்கின்ற வகையில் இட ஒதுக்கீட்டு விஷயத்தில் தமிழ்நாடு அரசு ஒரு வெற்றி வீரனாக விளங்குகிறது.

அண்மையில் Apex நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் மறுதலித்து வழங்கிய தீர்ப்புகளால் சட்டத்தைப் பொறுத்தவரை ஒரு நிச்சய மற்ற நிலைமை நிலவுகின்றது.

இதன் தொடர்பாகத் தலைசிறந்த நீதிபதிகளில் ஒருவராகிய எச்.எம்.சீர்வை, நான்காம் பதிப்பு (1991) முதல் சுவடி பத்தி 9.340-இல் கூறிய கருத்துக்களை நான் மேற்கோள்காட்ட விரும்புகிறேன். 9.340 சட்டப்பிரிவுக்கூறு 141-இன்படி எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத் தும் சட்டங்களை உச்சநீதிமன்றம் கூறு கிறது. இதன்படி, தனிப்பட்ட கருத்து எதுவாயினும் உச்சநீதிமன்ற நீதிபதிகள், நீதிக் கட்டுப்பாட்டுடன் விளங்க வேண் டும் என்றாகிறது.

'அரசியல் சட்டத்தின் தத்துவம் மற்றும் அரசியல் சட்டத்தின் மதிப்பீடுகள் குறித்தும், சட்டமன்றத்தில் செய்யப்படும் சட்டங்கள் மீது நீதிமன்ற ஆய்வு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிபதியின் வேலை குறித்தும் அநேக நீதிபதிகளுக்கு வன்மை யான கருத்துக்கள் உண்டு. கடந்த 12 முதல் 15 ஆண்டுகளாகத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்படாத சுதந்திரம் தமக்குண்டு என்று இவர்கள் கருதி வந்துள்ளார்கள். அந்தத் தீர்ப்புகளுக்கு அவர்களும் கட்டுப்பட்டவர்களே என்பது வெளிப் படை. மாபெரும் அரசியலமைப்புச் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் தீர்க்கமான எந்தச் சட்ட முடிவும் இல்லை என்ற நிலையை நாமடைந்துவிட்டோம். நீதிபதியும் அரசியல் அமைப்புச் சட்டமும் எதிரும் புதிருமாக இருக்கும் நிலையைத் தற்போது பரிசீலிக்கும். அதற்கு முன் நீதிமன்றங்கள் வழக்கைத் தீர்த்துவைப் பதற்காகவே இருக்கின்றன என்பதை நெஞ்சில் கொள்ளவேண்டும்.

நமது சமுதாயத்தை ஆள்கின்ற சிக்க லான சட்டங்களால் வழக்காடுவோர் சட்ட ஆலோசனைக்காக வழக்கறிஞரின் உதவியை நாடித்தான் தீர வேண்டியுள் ளது. முடிவான சட்டத்தீர்வு இல்லை என்றும், தீர்ப்பு வழங்கப்படும் வரை, என்ன தீர்மானிப்பது என்றறியா நிச்சய மற்ற நிலைதான் என்றும், உள்ள ஒரு சூழலைக் கடைசி நீதிமன்றம் உருவாக்கு மானால், வழக்கறிஞர்கள் உறுதிப்பாட் டோடு எந்த ஆலோசனையையும் வழங்க முடியாது. நீதிமன்றமும் எதற்காக உள் ளதோ அந்தப் பணியை நிறைவேற்றத் தவறிவிடுகிறது. மண்டல் கமிஷன் வழக்கு களில் இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அண்மையில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப் பானது பற்பல ஆண்டுகளாக நிலை பெற்று நின்றுள்ள, முந்தைய தீர்ப்பு களின்படி நிலவி வந்துள்ள நிலையான நிலைப்பாட்டை மீறிடும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாறு நலிந்த பிரி வினருக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 46-வது பிரிவின்படி ஒரு மாநில அரசு அளிக்கும் சலுகைகள், அந்த நலிந்த பிரிவினருக்குப் பாதகம் ஏற்படும் வகையில் இந்தத் தீர்ப்புகளால் பறித்துக் கொள்ளப்படும் ஒரு நிலவரம் ஏற் பட்டுள்ளது.

நீதிமன்றங்கள், சட்டங்கள் இன்னவை யென விளம்பலாமே தவிர, முற்றிலும் சட்ட மன்றங்களின் அல்லது நாடாளு மன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட் பட்டதான, சட்டம் இயற்றும் அதிகாரங் களைத் தாங்களே மேற்கொண்டுவிட முடியாது.


இந்தப் பின்னணியில் நீதிபதி கிருஷ்ணய்யரின் வாசகங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென்று கருது கிறேன்.

"சட்டமென்பது ஓர் இலக்கினை நோக்கிச் செல்வதற்கான வழி, நீதிதான் அந்த இலக்கு. ஆனால், நடைமுறையில் பார்ப்போமானால் நீதியும், சட்டமும் நெடுந்தொலைவில் இருக்கும் சகாக்கள் எனலாம். சில நேரங்களில் சட்டமும், நீதியும் வினோதமான பகையாளிகளாகக் கூட இருக்கின்றன. சட்டம் நீதியைச் சுட்டு வீழ்த்திவிட்டால் என்ன நடக்கும்? மக்கள் சட்டத்தைச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள். சட்டமே இல்லாத அராஜக நிலை தோன்றி வளர்ச்சியை முடமாக்கிவிடும். ஒழுங்குநிலை குலையும், முன்னேற்றம் தடைப்பட்டுப் பின்னடையும். இதுதான் இன்று காணப்படுகின்ற காட்சி".

—இவ்வாறு நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் கூறுகிறார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு நடேசன் பால்ராஜ் அவர்கள் 'முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு' நிதிக்கு ரூ.1,60,000-க்கான காசோலையை வழங்கினார் (7.12.1993).





புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சென்னை கப்பற்படைத் தளபதி கமாண்டர் ஆர். நாத் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (9.12.1993).

எனவே, நீதி அரங்குகளின் நம்பகத் தன்மையைக் கட்டிக்காக்கவும் பொது மக்களின் மனத்தில் முழுமையான நம்பிக்கையை உருவாக்கிடவும் நீதி மன்றங்களில் அளிக்கப்படும் தீர்ப்புகள் பெருவாரியான மக்கள் ஏற்கத்தக்க வகையில் அமைந்திருக்க வேண்டும். நீதிமன்றங்களின் தீர்ப்பா, மக்களின் தீர்ப்பா என்னும் கேள்வி எழுமாயின் மக்களுடைய தீர்ப்புதான் மேலோங்கி நிற்கவேண்டும். ஏனெனில், மக்களாட்சி முறையில் மக்கள் அளிக்கும் தீர்ப்புதான் இறுதியானது.

ஆக, நீதிமன்றங்கள் சமூகப் பார்வை பெற்றிருப்பதோடு, சட்டத்திலுள்ள வகை முறைகளுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் போது அரசியலமைப்புச் சட்டத்தில் போற்றிப் பொறிக்கப் பட்டுள்ள சமூகத் தத்துவக் கருத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். சமூக பொருளாதார பிரச்சினைகளில் சில நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகள் மக்கள் ஏற்கத் தக்கவையாக இல்லையென்றால் அதன் காரணமாக மக்களிடையே வெறுப்பு ஏற்பட அது வழி வகுக்கும் என்பதோடு நாளடைவில் நீதிமன்றத்தின் நம்பகத் தன்மையையே அது கடுமையாகப் பாதித்து நீதித்துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அது அரித்துவிடும். அதனால் ஏற்படும் சூழலால், சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் கடுமையாக இருக்கக்கூடும்.

பல்வேறு நீதிமன்றங்களில் வசதிகளை நவீனப்படுத்துல் இன்றியமையாத ஒன்று. விரைந்து வழக்குகளை முடிவு செய்ய இது அவசியமாகும். தமிழ்நாடு அரசு இந்த வகையில் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களின் வேண்டுகோளை ஏற்று, உயர்நீதிமன்றக் கட்டடத்தைக் குளிர்பதனப்படுத்தவும், இணைப்புக் கட்டடம், நீதிபதிகளின் அறைகள் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் அறை ஆகியவற்றை உயர் நீதிமன்றக் கட்டடத்தில் அமைக்கவும் 1.28 கோடி ரூபாயை எங்கள் அரசு வழங்கியிருக்கிறது.

இது போலவே நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் கட்டவும், நீதிபதிகளுக்கான குடியிருப்பு இல்லங்கள் அமைக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம், நீதிமன்றங்களை நவீனப்படுத்துவதை நோக்கி எங்கள் அரசு முன்னேறிச் செல்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

எங்கள் அரசு நீதி நிர்வாகத்திற்கு முன்னுரிமை வழங்கி இருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். பதவியேற்ற முப்பது மாதங்கள் முடிவதற்குள்ளாகவே முப்பத்தைந்து சார்நிலை நீதிமன்றங்களை எங்கள் அரசு அமைத்திருக்கிறது என்பது இந்த உண்மைக்குச் சான்று பகரும்.

எங்கள் அரசு இரண்டாவது செயற் பணிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறது. அற்ப வழக்குகளை விசாரிக்கவும் பொருத்தமான பரிகாரங்களைப் பரிந்துரைக்கவும் மாநிலத் தலைமை அரசு வழக்குரைஞர், சட்டம் மற்றும் நீதி நிர்வாகச் செயலர்கள் ஆகியோர்களை உள்ளிட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்பது இரண்டாவது செயற் பணிக் குழுவின் கருத்துரையாகும். குற்றங்கள் தொகைப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு முறையான இழப்பீடு கிடைக்க வழிமுறைகள் ஆய்ந்து காணப்படவேண்டும். குற்றவியல் சட்டம் 320, 321, 357, 358 மற்றும் 359 ஆகிய பிரிவுகளைத் திருத்த ஒரு பொதுச் சட்டம் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு பரிசீலனை செய்யலாம். மாநில அளவில் குறிப்பிட்ட கால இடைவெளியில் நீதித்துறைக் கூட்டம் ஒன்று நடத்தவேண்டியதன் அவசியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உயர்நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளைப் பற்றி ஆய்வு செய்ய ஓர் உயர்நீதிமன்ற நீதிபதி, அரசுத் தலைமை வழக்குரைஞர் கழகத்தின் பிரதிநிதி ஒருவர், சட்டம் மற்றும் நீதித்துறைகளின் செயலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். தற்சமயம் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மட்டுமே இந்த ஆய்வை மேற்கொள்ளுகிறார்கள்.

அரசாங்கம் வழக்காடுவதில் முதன்மை பெற்றிருப்பதால் அரசுப் பிரதிநிதிகளும், சட்டத்துறை அலுவலர்களும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் நடத்தும் அத்தகைய ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பெருவாரியான வழக்குகள் ஒரு சில மூத்த வழக்குரைஞர்களிடம் மட்டுமே தேங்கிக் கிடப்பதும் கூட வழக்குகளை விரைவில் முடிப்பதற்குத் தடையாக இருக்கிறது. வழக்குரைஞர் கழகம் தன்னுடைய உறுப்பினர்கள் சிலரிடம் மட்டுமே முறையில்லாத அளவுக்கு வழக்குகள் தேங்கிக்கிடப்பதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மூன்றாவது செயற்பணிக்குழு பரிந்துரை செய்திருப்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

மேலும், வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் விரும்பத்தகாத நிலையைத் தவிர்ப்பதற்கு மத்திய அரசு வழக்குரைஞர்களுக்கான பொருத்தமான நடத்தைக் கோட்பாடு ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்பதையும் எங்கள் அரசு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. இந்தச் சிக்கலுக்கு இது தீர்வாக அமையும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அறிவார்ந்த இந்த அவையின் முன்னர் இன்னொரு கருத்தையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மூத்த வழக்குரைஞர்களிடம் இளைய வழக்குரைஞர்கள் பயிற்சி பெறும் முந்தைய முறையைப் புதுப்பித்து, அதைத் தவிர்க்க இயலாததாகச் செய்ய வேண்டும். இதன் மூலமாக ஒளிமிகுந்த வழக்குரைஞர்கள் என்னும் நடச்சத்திரக் கூட்டத்திற்குச் சிறப்பு மிக்க புதிய தாரகைகள் கிடைப்பார்கள்.

சமூகத்தின் அறிவார்ந்த உறுப்பினர்களாகிய இவர்களின் வேலை நிறுத்தம் போன்ற விரும்பத்தகாத சூழல்கள் உருவாவது இதன் மூலம் தடுக்கப்படும். சட்ட உதவி வழங்கு குழு (வழக்குரைஞர்கள்) அமைக்கப்பட்டதும் வழக்குரைஞர்கள் சமூகப் பணியாளர்கள், நீதிபதிகள் ஆகியோர்களைக் கொண்டு முறையாகச் சட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சிகளை விரைவுபடுத்தி இருப்பதும், முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதியின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. குடும்ப வழக்கு மன்றங்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து எங்கள் மாநிலத்தில் திருமணம் தொடர்பான வழக்குகள் தேங்கியிருப்பது கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருப்பினும், அரசு இயந்திரம் முழுவதும் சட்ட உதவி வழங்கும் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்தப்படாவிட்டால் போற்றத்தக்க இந்த இயக்கத்தின் குறிக்கோள்களைக் கிராமப்புறங்களுக்குக் கொண்டு செல்ல இயலாது என்பதை



## திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் சித்த மருத்துவ வாரியத்திற்குத் தலைவராக நியமனம்

திரு கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் சித்த மருத்துவத் துறையில் ஆற்றியிருக்கும் பல்வேறு பணிகளைக் கருத்தில்கொண்டு அவர்களை சித்த மருத்துவ வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நியமித்து தலைமைச் செயலகத்திலேயே கோப்பில் உத்தரவிட்டார். திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் சித்த மருத்துவ வாரியத்தின் தலைவராக ஓராண்டுக் காலத்திற்கு இருப்பார். இவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000 வழங்கவும் மற்றும் அவர் உபயோகத்திற்கு கார், தொலைபேசி வசதிகளையும் அளித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்.

முன்னதாக, திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதி கோரி இருந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.12.93 அன்று நாகப்பட்டினம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிக்காப்டர் மூலம் சென்று பார்வையிடும் பணி இருந்தும்கூட, திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் 30 நிமிடம் நடந்தது.

திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு பணிகளுக்கிடையேயும் தம்மைச் சந்தித்தது குறித்து, தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சட்ட உதவி வழங்கும் கழகத்தின் செயற் பாட்டை முறைப்படுத்தும் நோக்கோடு சட்டப்பணியாளர் ஆணைக்குழு சட்டப் பிரிவு 1987, (1987 மத்திய சட்டப் பிரிவு எண்.39)-க்குத் திருத்தம் கொண்டு வரும் முயற்சியில் மத்திய அரசு ஈடு பட்டிருக்கிறது. ராஜ்ய சபாவில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு நிறை வேறி இருக்கிறது. நாடாளுமன்றத்தின் ஒப்புதலைத் தற்போது எதிர்நோக்கி இருக்கிறது. இந்தத் துணைக் கண்டம் முழுவதும் ஒரே மாதிரியான நன்கு சம நிலைப்படுத்தப்பட்ட சட்ட உதவி முறைகள் விளங்கும் விதத்தில், இனியும் காலந்தாழ்த்தாது இந்த மத்தியச் சட்டம் விரைவில் கொண்டு வரப்பட வேண்டு மென்று இந்த நீதியரங்கத்தின் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர் களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தென் பகுதியிலிருந்து வந்து வழக்காடும் மக்களின் குறைதீர்க்க மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை அமைக்கப்பட வேண்டுமென்று 1972 முதற்கொண்டு மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வந்துள்ளது. அரசுக்கு தன் பரிந்துரைகளை வழங்குவதற்காகச் சென்னை உயர்நீதிமன்றமும் நீதிபதிகள் குழு ஒன்றினை அமைத்துள்ளது. மிக விரைவில் சென்னை உயர் நீதிமன்றம் தன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் எங்கள் மாநிலத்தில் தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் நீண்டநாள் தேவை விரைவிலே நிறை வேற்றப்படுமென்றும் நான் பெரிதும் நம்புகிறேன்.

அதுபோலவே முன்னாள் தமிழக முதல்வரும் எனது ஆசானுமாகிய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றினை இந்த மாநிலத்தின் நீண்ட நாள் தேவையை நிறைவேற்றும் விதத்தில் சென்னையில் அமைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். இந்த நீண்டநாள் தேவையை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் விரைவில் நிறைவேற்றி வைக்கு மாறு வேண்டுகிறேன். மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்தை இது பெரிதும் ஈர்ந்திருக்கிறது என்பதை நான் அறிவேன். தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேட தென்னக மக்கள் வேறு வழியின்றிப் புதுடெல்லி செல்ல வேண்டியிருப்பதாலும் தென்பகுதி மாநிலங்களில் தலைசிறந்த ஓர் இடத்தைச் சென்னை நகரம் பெற்றிருப்பதாலும் சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். புதுடெல்லியில் தேசிய சட்டக் கலைக் கழகத்தை மத்திய அரசு நிறுவியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கலைக் கழகத் தைச் சென்னையில் நிறுவ வேண்டு மென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்த விரும்புகிறேன்.

இன்றியமையாத அரசியலமைப்புச் சட்டப் பணியை, குறிப்பாக எல்லா மக்களுக்கும் நீதி வழங்கும் பணியை மேற்கொள்ளப் பயிற்சி பெற்ற சட்ட நுட்ப அறிஞர்கள் நீதித் துறைக்குக் கிடைக்கும் வகையில் சென்னையில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையோடு தமிழக அரசால் தொடங்கப்பட இருக்கும் பயிற்சிக் கழகமும், தேசியக் கழகமும் முழுக்கப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

நிறைவாக, தமிழக மக்கள் நீதி மன்றங்களை எளிதில் அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்த ஆக்கப்பூர்வ மான அனைத்து முயற்சிகளையும் தமிழ் நாடு அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிலையில் நீதித் துறையின் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றப் பெருமள வில், மிகுந்த பரிவோடு நிதி வழங்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த நீதியரங்கின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

புகழ்பெற்ற பேராளர்கள் நிரம்பிய இந்த அரங்கில், தமிழ்நாடு அரசின் கருத்துக்களைக் கூற எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ●


கூட்டுறவே நாட்டுயர்வு!

தொலைபேசி எண்: 32051 முதல் 32054 வரை

## மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

**மதுரை 625 001.**

சேமிப்பிற்குக் கூடுதல் வட்டி பெற எங்கள் வங்கியை நாடுங்கள்.
முன் கடனைத் திருப்பிச் செலுத்தி புதிய பயிர்க்கடன் பெறுங்கள்.
உங்களுக்கு உதவிட எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 37 கிளைகளையும் அணுகுங்கள்.

### எல்லோருக்கும் எளிதான சேமிப்புத் திட்டங்கள்

1. ரொக்கச் சான்றிதழ் திட்டம்.
2. இருமலர் திட்டம்.
3. அணையாவிளக்குத் திட்டம்.
4. பொது பிராவிடெண்ட் பண்ட் திட்டம்.
5. ரெக்கரிங் டிபாசிட் திட்டம்.

உங்களது டெபாசிட்டுக்களுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு. குறைந்த செலவில் காசோலைகள் மற்றும் உண்டியல்கள் வசூலித்துத் தரப்படும்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயிர்க்கடனாக நடப்பு ஆண்டில் ரூ.21 கோடியும், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களுக்கு மத்தியக் காலக்கடனாக ரூ.4 கோடியும் வழங்கப்பட உள்ளது. பண்ணை சாராக் கடனாக தனி நபருக்கு ரூ.10 இலட்சம் வரை 12 சதவிகிதம் முதல் 16.50 சதவிகிதம் வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

வீடு கட்ட ரூபாய் ஒரு இலட்சம் கடன் வழங்கப்படுகிறது.

**சி. விசுவநாதன்,**
செயலாளர்.

**எஸ். சாத்தூரப்பன்,**
தனி அதிகாரி.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்


தமிழ்நாடு கைத்தறி


- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண் M 8676
Licence No. TN MS(C) PP-23







மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாகப்பட்டினம் பகுதியில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கினார்.



